க்ஷத்திரிய மித்திரன்.

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—(திருக்குறள்.)

மலர் 6. | 1925௵ ஜனவரி௴ | இதழ் 5.

தெய்வ வழிபாடு.

"முழுமுதலே யைம்புலனுக்கு மூவர்க்கு மென்றனக்கும்
வழிமுதலே நின்பழவடியார் திரள்வான் குழுமிக்
கெழுமுதலே யருடந்திருக்க விரங்குங் கொல்லோவென்
றழுமதுவே யன்றிமற்றென் செய்கேன்பொன்னம் பலத்தரைசே."

பாண்டியநாடும், நாய்க்க அரசர்களும்.

(முன்றொடர்ச்சி.)

சென்றமாதம் கூறிய திருவழுதி நாடான் விளையிலுள்ள நாடார்கள் தவிர மற்ற சிற்றரச நாடார்கள் விஸ்வநாத நாயக்கருக்கு உட்பட்டு அடங்கி நடக்கநேர்ந்தது. அவர்களில் சிலரை இங்கறிவிப்பாம்:—

2. அகரம் நாடார்கள்
3. அகத்திஸ்புரம் நாடார்கள்
4. இராஜாக்கள் மங்கலம் நாடார்கள்
5. உமரிகர் நாடார்கள்
6. ஏரல் நாடார்கள்
7. காயாமொழி ஆதித்த நாடார்கள்
8. கானத்தூர் நாடார்கள்
9. குட்டம் மார்த்தாண்ட நாடார்கள்
10. குரும்பூர் நாடார்கள்
11. சிறுத்தொண்ட நல்லூர் நாடார்கள்
12. பரிக்கப்பத்து நாடார்கள்
13. பரமன்குறிச்சி நாடார்கள்
14. பள்ளிப்பத்து நாடார்கள்
15. புதுக்குடி நாடார்கள்
16. மாவிடுபெண்ணை நாடார்கள்
17. மாருதெண்டுப்பத்து நாடார்கள்
18. மூலபுளி நாடார்கள்
19. வாலுபன்விளை நாடார்கள்
20. வாளவல்லான் நாடார்கள் (இன்னும் பல வூர் நாடார்களாவர். ஒவ்வொரு வூரி லுமுள்ள நாடார்கள் தங்கள் தங்க ளாதிக்கத்தைத் தெரிவித்தலோடு, தங் களிடமிருக்கும் இது சம்பந்தமான தஸ்தாவேஜிகள், பட்டயங்கள், சிலா சாஸனங்கள் முதலிய வைகளுக்கும்

நகல் எடுத்தனுப்பும்படிக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.)

இவ்வூர்களை எல்லாம் பூர்வம் சித்ராசபாத்தியதையில் நாடார்களால் ஆளப்பட்டு வந்தன. அப்படி ஆண்டுவந்த நாடார்களை நிலைமைக்காரர் எனப்பட்டுவந்தது. இச்சித்ராச நாடார்களுக்குரிய நிலைமை பாத்தியதையைக் குறித்து சில அங்கிலேயர் எழுதியுள்ள அபிப்பிராயத்தை இங்கறிவிப்பாம்:—

"The Nadans, a name signifying 'lords of the soil' are Sandrar land-owners who claim rights of Seigniorage over most of the villages in the South." Vide Bishop Caldwell's Tinnevelly and The Tinnevelly Mission, 1869; and The Mission of Edeyenkoody, 1845, ch. II, P. 6.

"நாடார் என்பது பூமிக்கதிகாரி என்னும் பொருள் கொள்ளும். அவர்கள் நாட்டுக்குடையவரா யிருக்கின்றார்கள். தென்தேசத்திலுள்ள அநேக கிராமங்களின்மேலும் ஆதி பத்திய உரிமையைக் கொண்டாடி வருகின்றார்கள்" என்று பிஷப்பு கால்டுவேல் துரை அவர்கள் 1845-ம் வருடத்தில் கூறியிருக்கின்றார்.

"I had also to deal with another class of claimants:—The Nadans, who had been the original proprietors of all the lands in the neighbourhood, and who still professed as lords of the soil, to have Certain rights of seigniorage over even the lands they had sold, esPecially the right of levying a small rent on all houses built within their boundaries and a small fee at weddings &c. I had no doubt about i's having been customarily submitted to." Vide Bishop Caldwell's Reminiscence. P. 87.

"இன்னொரு நாடுரிமைக்கார வகுப்பைக் கவனிப்பாம்:—நாடார்கள் கொற்கைக் கருகாமையிலுள்ள எல்லா நிலங்களுக்கும் சுதந்தரம் உடையவர்களா யிருந்தார்கள். அந்த நாடார்களை இப்பொழுதும் பூமிக்குரிய அரச சந்ததியார்கள் என பகிரங்கப்படுத்த அந்த நாடார்கள் விற்ற நிலத்தின்பேரிலும் சில யுக்தமான ஆதிபத்தியத்தை அதாவது அதிகாரத்தை உடைத்தாயிருக்கின்றார்கள். சாதாரணமாக அவர்களது எல்லைக்குட்பட்ட நிலங்களில் கட்டப்பட்ட எல்லா வீடுகளுக்கும் யுக்தமான சிறிய வரியையும், அந்த எல்லையில் வசிக்குமவர்களின் கலியாணத்தில்சிறியகட்டணத்தையும் வாங்கி வருகின்றார்கள். மற்றவர்களும் இவ்விதம் கொடுத்து (அவர்களுக்கு) கீழ்ப்படிந்து நடத்தல் பூர்வீக வழக்கை அனுசரித்து நடந்து வருகின்றார்கள் என சந்தேகமில்லாமல் சொல்லலாம்" என கால்டுவெல் துரை அவர்கள் தாமியற்றிய "ரெமினி ஸென்ஸ்" என்னும் புத்தகத்தில் கூறியிருக்கின்றார்.

"From all that I can find about them (Nadars) I am much inclined to agree with those who consider them to have been the original possessors of the (Pandiya) Country.

One strong argument in favour of this Conjecture, is that in the southern part of Tinnevelly, the highest class of Sandrars, called Nadans, are the acknowledged proprietors of the soil;in even when a Nadan has sold a piece of land, he retains the right to a sort of quit-rent.

Indeed the system is very like that of our lords of Manor, with the addition of the remarkable privilege, that in any dispute that is brought into a Court of law, with regard to landed property, though all other classes are obliged to establish their claims by written documents, it is only necessary for Nadan to be identified as the Nadan of such a particular spot; and the disputed property is adjusted to him, unless the opponent can prove his purchase of it." Vide, Miss. S. Tucker's (sister of Rev. J. Tucker, M. A.) South Indian Sketches, Pt, II, Letter, 4, P. 35; and The Travancore State Manual, Vol. II, P. 3.2. 398.

"இந்த நாடார்குலத்தவர்கள் பாண்டிய நாட்டிற்கு ஆதிபூர்வ பாத்திய உரிமை யுடையவர்கள் என்று எண்ணுகிறவர்களிலிருந்து, நானும் அவர்களைக்குறித்து ஆராய்ந்து அறிந்திருக்கிற விஷயங்கள் எல்லாவற்றிலும் இருந்தும், எனக்கும் அவ்வாரே அபிப்பிராயமாகின்றது.

இவ்வாறு அபிப்பிராயங் கொள்ளுதற்கு ஒரு பலத்த நியாயம் உண்டு. அந்த நியாயம் என்னவென்றால்:— திருநெல்வேலி நாட்டின் தென்பாகத்தில் வசிக்கிற சான்றோர்களுக்கு நாடார் என்னும் பட்டப்பெயர் வழங்கிவருகின்றது. இந்தப் பட்டப்பெயர் பெற்றிருக்கிற நாடார்கள் நிலத்துக்கு உரிமையுடைய நிலமைக்காரர் என எவரும் ஒப்புக்கொண்டுஇருக்கின்றனர். ஒரு நாடான் தன் சுதந்தரமான நிலத்தில் ஒரு துண்டு நிலத்தை அயலான் ஒருவனுக்கு கிரயஞ்செய்து கொடுத்திருந்தபோதிலும், மேற்படி நிலத்தைக் கிரயத்திற்கு வாங்கினவன் மேற்படி நிலத்திற்கு ஆதிபூர்வ பாத்திய உரிமையுடைய மேற்படி நாடானுக்கு நிலவரிப்பணம் கொடுத்து வருவது நெடுகிலும் வழக்கம்.

மெய்யாகவே இந்த வழக்கம் நம்முடைய அங்கிலேய நாட்டு அரசர்களுக்குள்ளும் இருக்கிற வழக்கம்போலிருக்கின்றது. இன்னும் ஒரு புராதனமான வழக்கம் உண்டு. நிலவியாஜ்ஜியம் நேரிடுங்காலத்தில் நியாயஸ்தலங்களில் மற்றவர்கள் எல்லோரும் எழுத்துப் பட்டயங்களாகிய சாசனங்களால் தங்களுக்குரிய மேற்படி நிலபாத்தியத்தை ருசுப்படுத்த வேண்டியதாயிருக்கின்றது. வியாச்சியக்காரன் மேற்படி நிலத்தைத் தான் கிரயத்திற்கு வாங்கினதை தஸ்தாவேஜுகளால் ருசுப்படுத்தாது போகிற காலத்தில், மேற்படி பூமிக்குரிய நாடான் எவனோ அவனுக்கே உரியதென்று தீர்ப்பாகின்றது" என டக்கர் துரைசானி அம்மாள் கூறியிருக்கின்றனர்.

(இந்த மூன்று அங்கிலேயப் பகுதிகளைப் போல் இன்னும் பல பகுதிகளுண்டு.)

இப்பகுதிகளால் நாடார்களது ஆதிக்கத்தை நன்கறியலாம். இவற்றில் கொற்கையைச்சூழ்ந்துள்ள கிராமங்களெல்லாம் நாடார்களது ஆதிக்கத்தில் உட்பட்டவை யெனப்பட்டிருக்கின்றன. கொற்கை பாண்டியர் ஆண்ட காலத்திலும், வடுகரசர் ஆண்ட காலத்திலும், பாண்டிய நாட்டிற்கு இராஜதானியாக விருந்த ஓர் சிறப்புறு பட்டணம். 'கொற்கையாளி குலசேகரன்புகழ்" என்பதால் பாண்டியராண்டதாகவும், மதுரை கெஸடரில் மங்கம்மாள் கொற்கையை யாண்டதாகவுங் கூறியிருப்பதாலும் அறியலாம். கொற்கை தலைநகரமாயிருத்தலால் பாண்டியரும், வடுகரசரும் ஆளவும், அதைச் சூழ்ந்துள்ள பிரதேசங்களை பல சிற்றரசர்களால் ஆளப்பட்டும் வந்தன. அச்சிற்றரசர்களெல்லாம் நாடார்களென்பதை விளக்க, மேற்கூறிய பிரமாணங்களில் கொற்கையைச் சூழ்ந்துள்ள எல்லாக் கிராமங்களும் நாடார்களுக்கு உட்பட்டவை என்கிறார்கள். அக்காலத்தில் மாத்திரமல்ல, தற்காலத்திலும் கொற்கைத் தவிர அதைச்சூழ்ந்துள்ள கிராமங்களெல்லாம் நாடார்களது ஆதிக்கத்தி லுட்பட்டவைகளே! கொற்கைக்கு வடவெல்லையாகவுள்ள 'அகரம்' என்னுங் கிராமமும்; கிழக்கெல்லையாகவுள்ள "உமரிககர்" என்னுங் கிராமமும், தெற்கெல்லையாகவுள்ள "ஏரல்" என்னுங் கிராமமும், மேற்கெல்லையாகவுள்ள "வாழவல்லான்" என்னுங் கிராமமும், இன்னும் அவற்றிற் கடுத்துள்ளகிராமங்களும் தானாம் மேற்கூறியவாறு நிலவுரிமை பாத்தியத்தில் நாடார்களிடம் அடங்கியிருக்கின்றன. நிலமைக்காரர் என நாடார்களையன்றி, மற்ற சாதியாரைக் கூப்பிடும் வழக்கம் அத்தென்தேசத்தில் என்றுங் கிடையாது. இவர்கள் சிற்றரசர்களாயில்லாவிட்டால்கொற்கையைச் சூழ்ந்துள்ள கிராமங்களெல்லாம் இவர்களாதிக்கத்தி லிருந்திராது. அப்பாண்டியநாட்டிலுள்ள ஜமீன்தார்களின் பரம்பரை முன்னோர்கள் ஸ்ரீ திருமலை நாய்க்கர் காலத்தில் தான் ஏற்படுத்தப்பட்டார்கள் என்னும் அவர்களது காலவரை ஏற்பட் டிருத்தலைப்போல்; இந் நாடார்களின் பூமி ஆதிக்கத்தின் காலவரை, இன்ன காலத்திலிருந்து, ஏற்பட்டதெனக் கூற ஒருவராலும் முடியாது. இந் நாடார்கள் பாண்டிய வம்ஸத்திலுதித்த, சிற்றரச பாத்தியதையை யடைந்து, பல கிராமங்களை ஆண்டுவந்த, அரச சந்ததியார்களென்பதை விளக்க, மேற்கூறிய பிரமாணங்களோடு, இன்னும் பல பிரமாணங்களும் உண்டு. அவற்றிலொன்றை இங்கறிவிப்பாம்:—

தாயாதிகளாகிய பராக்கிரம பாண்டியனுக்கும், குலசேகர பாண்டியனுக்கும், மதுரை, திருநெல்வேலியில், 11-ம் நூற்றாண்டில் நடந்த சண்டையில் இருவர் பக்கமுஞ் சேர்ந்து சண்டைசெய்த சிற்றரசர்களைச் சுட்டி:—

"And when the five chieftains, namely, Vadavalattirukkadi Nadalvar, Kudaya-muthu Rayar, Villava Rayar, Ancutta Nadalvar, „ „ proceeded to give battle." Vide, The Mahavansa, Part. II. Ch. LXXVI, p. 234.

"அப்பொழுது குலசேகர பாண்டியன் தனது ஐந்து சிற்றரசர்கள் அதாவது வடவலதிருக்கடை நாடாள்வார், குடையமுத்துராயர், வல்லவராயர், அங்குட்ட நாடாள்வார், முதலியவர்கள் சண்டைக்குச் சென்றனர்கள்" எனவும்;

"And he took with him Malava Cakravatti, „ „ „ Punkunda Nadaluvar, Karamba Rayar, and the Nadalvars by name Kanidyuru, Thalanduru, Kangayar, Viraganga, „ „ Alatturu Nadâlvar, „ „ Kalavandiya Nadalvar." Vide, The Mahavansa, Pt. II. ch. LXXVI, P. 237.

"மாளவசக்கரவர்த்தி, „ „ புங்குண்ட நாடாள்வார், கேரம்பராயர், கண்டையூர், தலண்டூர், கெங்கையாறு, விரகெங்கா நாடாள்வார்கள், „ „ அலத்தூர் நாடாள்வார் „ „ கலவண்டை நாடாள்வார் முதலியவர்கள் சேர்ந்து சண்டைக்குச் சென்றார்கள்" எனவும்; இன்னும் அப்புத்தகத்திலேயே பல பக்கங்களிலும் சிற்றரச நாடார்களின் தன்மையை விளக்கப்பட் டிருக்கின்றன. இந் நாடார்கள் திருவாங்கூர் ராஜா, இராமநாதபுரத்து ராஜா என்பேன்று தாங்களாண்ட நாட்டின் பெயரோடு சேர்த்தெண்ணப் பட்டார்கள். இவைகளால் நாடார்களே சிற்றரசர்களா யிருந்தார்களென்பதை நன்குணர்த்தப்படும். கிரீடாதிபதியை பாண்டியனென்றும்; அவனது வம்ஸத்து சிற்றரசர்களை நாடார்களென்றும் அழைக்கப்பட்டு வந்தமையையு மறியலாம்.

"From a few stray hints that are found in the Tamil literature and the traditions peculiar to the race. We learn that the Nadars belong to a wave of warlike adventurers, who migrated towards the South from North India. They appear to have in the earliest times, settled down as rulers in several parts of the country. The fact of their having been a ruling race at one time is borne out not only by such expressions as Nadar and Nadalvar, but also by numerous customs which are peculiar to them and by other circumstances. The expression Nadalvar occurs in some ancient stone inscriptions of Travancore. Their rule was subsequently over-thrown by later waves of Dravidians." Vide, Travancore Government Gazette, supplement, dated, 8th August, 1905. Archæological sheet, No. 8. and The Travancore State Manual, Vol. II, Ch. IX. P. 393. by Mr. V. Nagamaiya, B. A., F. R. Hist. S., in 1906.

"தமிழ் நூற்களில் காணப்படுகின்ற சில துணிதலான குறிப்புகளிலிருந்தும், அந்தவம்ஸத்தில் வழங்கிவரும் பரம்பரையான நடவடிக்கைகளிலிருந்தும் நாம் நாடார்களை யுத்த வம்ஸத்தைச் சேர்ந்தவர்கள் என அறிகின்றோம். அவர்கள் வட இந்தியாவில் இருந்து தென் இந்தியாவிற்குக் குடியேறியவர்களாகும். அவர்கள் பூர்வம் தேசத்தின் பல பாகங்களில் தங்கி அரசாட்சிசெய்த சாதியார்களாகக் காணப்படுகிறார்கள். மெய்யாகவே! அவர்கள் ஒருகாலத்தில் அரசுசெய்த வம்ஸத்தவர்களாவர். அவர்கள் நாடார், நாடாள்வார் என்னும் பட்டப்பெயர்களை மாத்திரம் அணிந்தவர்கள் அல்ல, இன்னும் அநேக சிறப்பான நடைகொடி வழக்கங்களையும் அனுசரித்து வருகின்றார்கள். நாடாள்வார் என்னுஞ் சொல் திருவாங்கூரினுடைய சில பூர்வ சிலாசாசனங்களில் காணப்படுகின்றன. அவர்கள் அரசு அடுத்து வந்த திராவிடப்படை எழுச்சியின் பின் அழிக்கப்பட்டது" எனத் திருவாங்கூர் கெஜட்டிலும், திருவாங்கூர் ஸ்டேட்மானிலும் வெளியிடப்பட்டிருக்கின்றது.

"Under native rule the Nadars, who claim th be the original lords of the soil, were a

down-trodden race." Vide W. R. Cornish, F. R. C. S., Superintendent of Census Operations of the Madras Presidency for 1871.

"பூர்வ அரச வம்சத்தவர்கள் என உரிமைக் கொண்டாடும் நாடார்கள், தங்களுக்குப் பிந்தி வந்த வடுக ராஜாங்கத்தாரால் கீழ் தள்ளப்பட்டார்கள்" எனவுங் கார்னிஷ்துரை அவர்கள் கூறியிருக்கின்றார்.

"I doubt not, therefore, that when one dynasty upset a previous one, the latter were forced to flee the country, and seek homes eleswhere, and there hide their name and origin and become hewers of woods and drawers of water and undertake such low occupations as were despised by the other sections of the community, who found favour or were tolerated by the new dynasty." Vide, Prof. P. Sundram Pillai M. A., in The Tamilian Antiquary, No. 2, P. 4, 5. in 1907.

"எனக்குச் சந்தேகமறத் தெரிந்தபடி ஒரு புது இராஜாங்கத்தார் வந்து முந்திய இராஜாங்கத்தாரை தலைகீழாய்த் தாழ்த்தி அவர்களை பூர்வீயாதீனத்தை விட்டோடப் பலவந்தஞ் செய்வதால், அவர்கள் வேறெங்கேயாகிலும் புகலிடந்தேடி அங்கே தங்கள் பேரையும், பூர்வோத்திரத்தையும் மறைத்து, பூர்வ கிரியோனியா கிறகு வெட்டிகளும், தண்ணீர்ச் சுமைக்காரருமானது போல; மேற்படி புது ராஜாங்கத்தாரின் தயவைப்பெற்று சிலாக்கியமடைந்த இதர சாதிகளால் அவமதிக்கப்படுகிற தாழ்ந்த தொழில்களை நடத்திவருவது சகஜந்தான்" எனவுந் திருவனந்தபுரம், கவர்ன்மெண்டு காலேஜ் புரோபெஸராயிருந்த ஸ்ரீமான். பி. சுந்தரம் பிள்ளை எம். ஏ., அவர்களால் எழுதப்பட்டிருக்கின்றது. இப்பகுதிகள் மேற்கூறிய பகுதியை ஆமோதிக்கின்றன. இம் முப்பகுதிகளிலும் நாடார்கள் வடுகரசர்களால் அரசிழந்தமையையும், அவர்களால் இடுக்கணுற்று இழிந்த தொழிலைப்புரிந்து இழிவடைந்தமையையும் விளக்கியிருக்கின்றன. இப்பகுதிகளையும் மேலே கூறிப்போந்தப் பகுதிகளையும் ஆண்டு யோசிக்கில் நாடார்களை அரசவம்சத்தவர்கள் அல்லவெனக் கூற யாரால் முடியும்.

இப்பகுதிகளால் நாடார்கள் தென்னிந்தியாவை அரசாட்சிசெய்த வம்சத்தவர்கள் என்பதும், அவர்கள் அரசு அடுத்துவந்த அரசர்களால் தள்ளப்பட்டதென்பதும் தெள்ளிதிலுணரப்படும். விஸ்வநாத நாய்க்கருக்குமுன் பாண்டியநாட்டை யரசாண்டுவந்த நாடார்களது ஆதிக்கம், பிறரது ஆதிக்கம் மேம்பட மேம்பட, இந்நாடார்களது ஆதிக்கம் தினே தினே உலக்கைத் தேய்ந்து உளிப்பிடியானதைப்போல், குறைந்துவரநேர்ந்தது. இவ்விதம் அடக்கியாண்ட விஸ்வநாத நாய்க்கர் கிறிஸ்தாப்தம் 1563-ல் இறந்தார். இவருக்குப்பின் இவரது குமாரர் பெரிய கிருஷ்ணப்ப நாய்க்கர் அரசாள முன்வந்தனர்.

(இன்னும் வரும்.)

பத்திராதிபர்.

———(o)———

திருவள்ளுவனார் வரலாறு.

(முன்றொடர்ச்சி.)

(உயர்திரு சுவாமி உருத்திரகோடீசுவரர், தாய்நாட்டில் எழுதியது.)

அக்கபிலர் சேரமான் செல்வக் கடுங்கோ வாழியாதன் என்னும் வேந்தர்மீதுப் பாடிப் பெரும் பரிசில்கள் பல பெற்றவர். நக்கீரனார், பொருந்தில் இளங்கீரனார். பெருங்குன்றூர் கிழார் முதலான பெரும் புலவர்களாலும், வெள்ளிவீதியார், மாக்கோதை நப்பசலையார் முதலான நல்லிசைப் புலமைவாய்ந்த பெண்பாலராலும் மாந்தரஞ் சேரலிரும் பொறை என்ற சேரவரசராலும் புகழ்பெற்றவர்; பரம்புமலைத் தலைவரும் வள்ளியோருமாகிய வேள்பாரியின் உயிர் நண்பர்; அவ்வள்ளல் இறந்த பின்னர் அவர் பிரிவாற்றாது துஞ்சியவர். அத்துணைப் பெருமைவாய்ந்த கபிலர் என்னும் நல்லிசைப் புலவராற்றான் 'கபிலர் அகவல்' என்பதும் செய்யப்பட்டதோ வென்பது ஐயத்திற்கு இடமாகவே உளது. என்னையெனின், அவ்வகவலைப் பரிசோதித்துப் பார்க்குமிடத்து, அச்சங்கப்புலவர் கபிலரின் பாட்டுக்களின் நடைவேறாகவும் மற்றைய

அகவற் பாட்டின் நடைவேருகவும் உள்ளன. ஆயி னும், அவ்வகவல் செந்தமிழ்ப் பயிற்சி பெரிதும் அடையப்பெருத பார்ப்பனர்க்கு உயரிய கருத்துக் களை அறிவுறுத்தும் பொருட்டே செய்யப்பட்டதா மாதலின், அதன் நடை எளிபதாக இருக்கின்றதென அறிவாளர் சிலர் கூறுவர். இது ஒரு புறம் இருப்ப,

"நாளைச் செய்குவ மறமெனி லின்றே
கேள்வி நல்லுயிர் நீங்கினு நீங்கும்"

என்ற 'சிலப்பதிகார'க் கருத்தானது 'கபில ரகவலில்

"நன்றே செய்பவும் வேண்டும் நன்றும்
நாளைநாளை யென்பீராகில்
நமனுடை முறைநா ளாவது மறியீர்
நம்முடை முறைநா ளாவது மறியீர்" என்றும்,

"மறத்துறை நீங்குமின் வல்வினை யூட்டுமென்
றறத்துறை மாக்க டிறத்திற் சாற்றி
நாக்கடிப்பாக வாய்ப்பறை யறையினும்
யாப்பறை மாக்க ளியல்பிற் கொள்ளார்"

என்ற சிலப்பதிகாரக் கருத்தும்,

மாற்றருங் கூற்றம் வருவதன் முன்னம்
போற்றுமின் றமெனச் சாற்றிக் காட்டி
நாக்கடிப் பாக வாய்ப்பறை யறைந்தீர்

என்ற 'மணிமேகலை'க் கருத்துமது, 'கபிலரகவ'லில்,

"உலகத்தீரே யுலகத்தீரே நாக்கடிப்பாக
வாய்ப்பறையறைந்து சாற்றக்கேண்மின்" என்றும்,

"தவத்துறை மாக்கண் மிகப்பெருஞ் செல்வ
ரீற்றிளம்பெண்டி ராற்றப் பாலகர்
முதியோ ரென்னு மிளையோ ரென்னன், கொடுந்
தொழிலாளன் கொன்றனன்" என்ற 'மணிமேகலை'
கருத்தானது, 'கபிலரகவ'லில்,

"எப்போதாயினுங் கூற்றுவன் வருவான்
நல்லாரென்று நல்குரவறியான்
தீயாரென்னான் செல்வரென்றுன்னான்" என்றும்,

"பூங்கொடி நல்லாய் பொருந்தாச் செய்தனை
யுடற் கழுதனையோ ருயிர்க் கழுதனையோ
யுடற் கழுதனையே லுன் மகன்றனை
யெடுத்துப்புறங் காட்டினர்யாரோ?
யுயிர்க் கழுதனையே லுயிர்புகும் இல்
செயப்பாட்டு வினையாற்றெறிந் துணர்வரியது"

என்ற 'மணிமேகலை'க் கருத்தானது, 'கபிலரகவ'லில்

"எதுக்கழுவீ ரேழையர்களே
உயிரினையிழந்தோ வுடலினையிழந்தே
உயிரினையிழந்தழு தமென் றேதவீராகில்
உயிரினையன்றலா தின்றுங்கண்டிலீர்
உயிரினையிழந்த வுடலது தன்னை
ஈமத்தீயை யெரியெழமூட்டிப்
பொடிப்படச்சுட்டுப் புனலிடைமூழ்கிப்
போய்த்தமரோடு அத்திசைத்தருவீர்" என்றும்,

"மாமலறமாக்கள் வருங்குலங்கேண்மோ
முதுமறைமுதல்வன் முன்னர்த்தோன்றிய
கடவுட்கணிகை காதலஞ்சிறுவ
ரருமறைமுதல்வ ரந்தணரிருவரும்"

என்ற 'மணிமேகலை'க் கருத்து 'கபிலரகவ'லில்,

"சேற்றிற்பிறந்த செங்கழுநீர்போலப்
பிரமற்குக் சூத்திரியிற்றிற் பிறந்தவசிட்டரும்
வசிட்டருக்குசண்டாளி வயிற்றிற்பிறந்தசத்திரும்
சத்தியர்க்குப்புலைச்சிதோள் சேர்ந்துபிறந்த பராசரும்
பராசருக்குமீன்வாணுச்சி வயிற்றிற்பிறந்த வியாசரும்
(இந்நால்வரும்)
வேதன்களோதி மேன்மைப்பட்டு
மாதவராகி வயங்கினரன்றோ?" என்றும், போந்
திருக்கின்றமை அவ்வகவல் சங்கப்புலவராகிய கபில ருடையதோ வென்னும் ஐயத்தைப் பெருக்குகின்ற மையே யல்லாமல், அது 'சிலப்பதிகார' 'மணிமே கலை' நூல்களுக்குப் பிற்பட்டது என்பதும் செவ் வனம் பெறப்படலாகும். ஆனால், அவ்வகவலின்கண் பழைய நூற்களின் சொற்றொடர்களும் கருத்துக் களும் பொன்னிற்பொதிந்து போற்றி அமைக்கப்பட் டிருக்கின்றமையே அதற்குப் பேரழகு செய்வதா கின்றது. இவ்வாறன்றி, கபிலர் தம் அகவல் நிருவாக் கே 'சிலப்பதிகார'த்தின் கண்ணும், 'மணிமேகலை' யின் கண்ணும் பிரதி தொனியாகத் தோன்றிற்று என்று சொல்லுவாரும் உளர். தென்னாட்டிலிருந்த வைதிகப் பார்ப்பனருடைய செருக்கையும், வஞ்சனை யையும், பிறப்பினாலேயே உயர்வு உண்டென்னும், அவர் தம் தவறான கொள்கையையும் ஒழித்திட்டு, சமத்துவ உரிமையை நாட்டவே அவ்வகவல் இடைக் காலத்திலிருந்த ஒரு அறிஞரால் இயற்றப்பட்டதாக லாம். அச்சீர்திருத்தக் கருத்திற்கேற்பவே எழுவர் கதை ஒன்று புனைந்து கொள்ளப்படலாயிற்று. அஃது ஒரு குழ்ச்சித்திறனேயாகும். அங்ஙனமாயினும், அவ் வகவல் இக்காலத்தில் தமிழர் தம் சமூகத்தைச் சீர் திருத்தஞ் செய்தற்குப் பெரிதும் பயன்படற் பால தாகும்.

இனிச் சங்கப்புலவராகிய கபிலரது ஊர் பாண்டி நாட்டுத் திருவாதவூர் எனப்படுகின்றது. ஆனால், அவ் வகவலின்கண், கபிலர் சோணாட்டுத் திருவாரூரில் பிறந்தாரெனக் குறிப்பிட்டிருக்கின்றது. அதியமான் நெடுமான் அஞ்சியினது ஊர் தகடூர் எனப் பழைய நூல்களின்கண் கூறப்பட்டிருக்கின்றமைக்கு மாருக, அவன் ஊர் வஞ்சி என்று அவ்வகவலில் மொழியப்

பட்டிருக்கின்றது. அதியமான் என்னும் அவ்வள்ளலையும் அவனைத் தந்தையாகப் போற்றிப் புகழ்ந்து வணங்கிப் பாடிப் பரிசில் பல பெற்றுப் பல ஊர்களிலும் விரலியாராகத் திரிந்து வாழ்க்கை நடாத்திய ஔவையாரையும் உடன் பிறந்தார் என்று உரைக்கப்பட்டிருக்கின்றமை எங்ஙனம் பொருந்தும்? அன்றியும் திருவள்ளுவர் கொலை புலையைக் கடிந்தவர் ஔவையாரோ கள்ளருந்திப் புலால் உண்டவர். அவ்விருவரையும் சகோதர சகோதரிகள் என்பதுதான் எவ்வாறு ஏற்புடைத்தாகும்? மேலும், அவ்வரலாற்றில் ஒரு மாரியம்மை, ஒரு பத்திரகாளி, முருகவேள் மணந்த வள்ளியம்மை இவர்கள் தம் கதைகளும் கலப்புற்றிருக்கின்றன. ஔவை, உப்பை, உறுவை முதலானவர்கள் தாம் பிறந்தவுடனே பாடினர் என்பதும், கபிலர் தமது ஏழாமாண்டிலேயே தம்முடைய வரலாற்றையும் உயர்ந்த சீர்திருத்தக் கருத்துக்களையும் எடுத்துப் பாடி அகவல் நூல் செய்தார் என்பதும் நம்பற்பாலனவல்ல இக்காரணங்களால் 'கபிலரகவ'லில் கூறப்பட்டுள்ள எழுவர் வரலாறு பிற்காலத்துப் புனைந்துரைக்கப்பட்டதே யாகும் என்பது நன்கு விளங்கும்.

அவ்வாறு அப்பிள்ளை வள்ளுவன் ஒருவனால் மிகப் பாராட்டி வளர்க்கப் பெற்றமையால் அதன் இயற்பெயர் முற்றிலும் மங்கப்பெற்று வள்ளுவப்பிள்ளையெனப் பலராலும் அழைக்கப்பெற்றதென்பர் சிலர் இதனால் அப்பிள்ளைகளுக்கு அப்பெயர் அவரை வளர்த்தவன்றன்குலம் பற்றி வந்ததிருப்பெயராமென நன்கு அறியப்படலாகும். அது;

“அறம்பொருளின்பம் வீடென்னு மந்நான்கின்
திறந்தெரிந்து செப்பியதேவை—மறந்தேயும்
வள்ளுவனென்பானோர் பேதையவன்வாய்ச்சொற்
கொள்ளா ரறிவுடையார்”

என்று மாமூலனார் கூறினமையாலும் இனிது விளங்கும்.

இனி, வள்ளுவர் என்று அவருக்குப் பெயர் வந்தமைக்குச் சாத்திரங்களில் இலை மறைந்த காய்கள்போல் மறைந்து வெளிப்படாமல் கிடந்த அரியபெரிய ஒழுக்கப்பொருள்களை யெல்லாம் எடுத்துரைத்த வள்ளன்மையே காரணமென்றும், அவர் கல்வி வளம் பெரிதும் உடையராய் இருந்தமையே காரணமென்றும், அவர் மலையாளத்திலுள்ள வள்ளுவ நாட்டில் பிறந்தமையே காரணமென்றும் சிற்சிலரால் தத்தமக்குத் தோன்றியவாறெல்லாம் கூறப்படும். சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் திருவள்ளுவர் என்பது இயற் பெயரேயென்று கொண்டனர். வள்ளுவன் என்ற பெயர் திருத்துறவாசிரியர்க்கே யன்றி வேறு சிலர்க்கும் இருப்பதாயிற்று. நாஞ்சில் வள்ளுவன் செய்தி வள்ளுவன், சிறீ வள்ளுவன் என்று சிலர் இருந்தமை அறிக. ஆசிரியர் ஒரு வள்ளுவக் குடியில் வளர்ந்திருப்பாராயின், தமிழ் நூல்களையும் வடமொழி நூற்களையும், செவ்வனே கற்றதற்கும், அரசர் முதலானவர்களோடு நன்கு பழகி உலகியல் அறிவு பெரிதும் அடைதற்கும் சமயங்கள் வாய்த்திரா என்பதையுங் கவனிக்க. அவர் தம் 'திருக்குறள்' நூலை உற்று நோக்குமிடத்து, அவர் உயர்ந்த நிலைமைகளில் இருந்தனராவர் என்பது தெற்றெனப் புலப்படா நிற்கும். அவருக்குத் திரிபுராந்தக கவீசுவரர் எனவும், எல்லாச் சாரியார் எனவும் பெயர்கள் வழங்கலாயின வென்றும் சொல்லப்படுகின்றது. திருவள்ளுவர் என்பதில் திரு என்பது அவரை நேரிற் கண்டாரும், அவரைப்பற்றிக் கேட்டாருமாகிய அனைவருடையாரால் விரும்பப்படுந் தன்மையும், அவரது உயர்வையும் காட்டா நிற்கின்றது. அவருக்கு இன்னும், மாதானுபங்கி செந்நாப்போதார், முதற் பாவலர், பெருநாவலர், பொய்யில் புலவர் எனப் பல பெயர்கள் வழங்கின. சிலர் மாதானுபங்கி என்பதே அவருடைய உண்மை இயற் பெயராக இருந்தல் வேண்டுமென்று கருதுகின்றனர். மாதானுபங்கி என்பதற்கு ஆங்காரத்தைப் பங்கஞ் செய்தவர் என்பது ஒரு பொருள். மற்றொருபொருள் மாதாவைப்போலும் தன் குழவியின்மீது அன்புவைத்துத் தன் முலைப் பாலைத் தருகின்றவள்போல உலகத்தில், உள்ள மக்கள்மீது அருள்வைத்து முலைப்பாலைச் சுரந்திட்டவர் என்பது. இதனைப்,

“பெற்றவரு நற்குருவும் பேணி யொருபொருளை
யுற்றிருகா லன்றியுரை செய்யார்—பற்றி
யொருபொருளைப் பத்துப் பொருளாகச் செப்பி
தருகையால் வள்ளுவரே தாய்.”

என்பதனாலும் அறிக. திருவள்ளுவனார் இனத்தால் தமிழராயினும் சமயக்கொள்கையால் பௌத்தரே யென்று உரைநாட்டுபவர்கள் தாம் மாதானுபங்கி என்பதே அவருடைய இயற்பெயர் என்பர். 'பங்கி' என்பது 'பொங்கி' யெனத்திரிந்து பர்மாவில் உள்ள பௌத்தசமய பிக்ஷுக்களுடைய பெயர்க்குக் கடையில் சேர்ந்திருக்கின்றதென்றும் அன்னார் காட்டுவர்.

குறிப்பு:—இவ் வியாசத்தை யனுசரித்து, எமது அபிப்பிராயத்தை அடுத்தமாதப் பத்திரிகையில் “கபிலரகவல் ஓர் கட்டுக்கதை” என்னுந் தலைப்பின்கீழ் வரையப்படும்.

(பத்திராதிபர்.)

முக்கியக் குறிப்பு.

(முன்தொடர்ச்சி.)

பூர்வம் ஐம்பத்தாறு தேசங்களில் ஒன்றாகிய சௌராஷ்டிரம் என்பதையே தற்காலம் பாம்பே ராஜதானியிலுள்ள கத்திவார் தேசமாகும். அதைப பாஞ்சால தேசமென்றும் அழைக்கப்படும்.

பம்பாய் கத்திவார் தேசத்திலுள்ள மிஙபூர் பட்டிணம் சந்திரகுலத்திலுதித்த கிருஷ்ணன் ருக்குமணியைக் கலியாணஞ் செய்துக்கொண்ட இடமாகக் கருதப்படுகிறது.

பம்பாய், கத்திவார் தேசத்திலுள்ள சோமநாதபுரம் கிருஷ்ணபகவான் இறந்த இடமாக எண்ணப்படுதலோடு அவரது ஞாபகார்த்த சின்னங்கள் பல அவ்வூரில் நிறைந்திருக்கிறது.

பம்பாய், கத்திவார் தேசத்திலுள்ள தான் என்னும் ஊர் பஞ்சபாண்டவரின் மனைவியாகிய த்ரௌபதைக்கு பிறப்பிடமாகச் சொல்லப் படுகிறது.

பம்பாய், காண்டிஷ் ஜில்லாவை, அழகில் மிகுந்த தமயந்தியின் புருடனாகிய நளமகாராஜனது, கிடதேயமாகச் சொல்லப்படுகிறது.

பம்பாயிலுள்ள சிக் என்னும் ஊரில் இராமாயணத்தில் கூறப்படும் இராமரது சகோதரராகிய லட்சுமணர் இராவணனது சகோதரியாகிய சூர்ப்பனகையை மூக்கரிந்த இடமாகக் கருதப்படுகிறது.

———(o)———

சிலாசாஸனத் துண்டுகள்.

(S. A. டேவதிஆதித்தன், காயாமொழி.)

சகாப்தம் 1561-ல் (கி. பி. 1639) எழுதப்பட்டதாய், திருச்செந்தூர் தாலுகா, குதிரைமொழி ரிசர்வ்பாரஸ்டின் தென்ஓரத்தில் நிற்கிற ஓர் பெரும் சாசனக்கல்லில், அக்காலத்தில் மானவீர வளநாட்டு வடபத்து இலாகாவில் ஆதித்தநாடான், கோவிந்தப்பணிக்க நாடான், விரப்ப நாடான், தித்திட்டி நாடான், பிச்ச நாடான், அய்யக்குட்டி நாடான், திக்கெலாங் கெட்டி நாடான், நிலைச்சதமுடிக்க நாடான், அவத்தைக்குதவி நாடான், குத்தியுண்டா நாடான் என்பவர்கள் ஜமீன்தார்களும் பிரபுக்களும் தங்கள் இலாகாவுக்குட்பட்ட சர்வ ஜாதிக்குடிகளின் பேரிலும் தீர்வைகளை ஏற்றஇறக்க, ரத்துச்செய்ய அதிகார முடையவர்களாயிருந்து, மதுரையை ஆண்ட திருமலை நாய்க்கருக்கு தீர்வை முதலிய விஷயங்களில் எப்பொறுப புடையவர்களாக அரசாண்டுவந்ததாகத் தெரிகிறது.

சகாப்தம், 170-ல் (கி. பி. 1785) எழுதப்பட்டதாய் குலசேகரம் பட்டணத்தில் நாட்டப்பட்டிருக்கிற ஒரு சாசனக்கல்லில், குட்டம் சந்திர மார்த்தாண்ட பணிக்க நாடான், குமார வீரமார்த்தாண்ட நாடான் முதலியவர்கள் அவ்விடத்தில் சிற்றரசர்களாய் அரசாண்டதாய்த் தெரிகிறது.

மதுரையைச்சார்ந்த ஆலயங்களி னுரிமைகள் பாண்டி மன்னர்களால் திருமலை நாயக்கர் காலத்தி லிழக்கப்பட்டன. இதைக் கண்ணுற்ற மற்ற ஆலயங்களிலும், அவ்வாறே நடத்த உத்தேசங் கொண்டுவந்தனர். ஆயினும் குலதெய்வமாக கொண்டு, மண்டபங்கள், நந்தவனங்கள், தேர், கணக்கற்ற சொத்துக்கள் ஸ்வாமிக்குக் காணிக்கையாகச் சமர்ப்பித்த ஆதித்தநாட்டாரின் திருச்செந்தூர் ஸ்ரீ சுப்பிரமண்ய ஸ்வாமியினுலயச் சுதந்தரம் நெடுங்காலமாக, அத்தெய்வத்தின் குலவழித் தொண்டராம் ஆதித்த நாடார்களால் இழக்கப்பட்டிலது.

ஆங்கிலமன்னர் காலத்திலே தர்மகர்த்தாக்கள் நியமித்து, தேவஸ்தலங்கள் பரிபாலிக்கப்பட்ட காலத்திலே மேற்கூறிய ஆதித்த நாடார்கள்மேல்பொறாமையும் துவேஷமுங்குடிகொண்டசில கர்த்தாக்களால் தங்கள் சுதந்தரத்தை யிழந்தார்கள். எனது கண்கான நடந்துவந்த சில சுதந்தரங்களுங்கூட இப்போது கிட்டத்தட்ட 5 அல்லது 7-வருஷங்கட்கு முன்னர் எடுக்கப்பட்டன. நவ உலகத்திலாவது சமாசமோக்குமாக.

விக்கிரகாராதனம்.

(இலத்தூர், சுந்தரராஜ சாஸ்திரி.)

———(0)———

ஐயா, விக்கிரகாராதனத்தின் பெருமையைச் சற்றுக் கவனியுங்கள்! தமக்குற்ற தோழனாகிய அர்ச்சுனனுக்குக் கண்ணனுபதேசித்தருளிய கீதாசாஸ்திரத்தில் "எத்திருவுருவை எவன் வழிபடினும் அவ்வழி நின்றருளி யவனை யாள்வது என்கடமை" என உபதேசிக்கப்பட்டது. அங்கு திருவுருவை வழிபடலென எடுத்தோதியமையால் இஃது பிரதிமாரூபத்தில் பூசித்தலெனவே பொருள்படும். அருவப்பொருளை அர்ச்சித்தல் கூடாமையால் உருவப்பொருளைப் பூசித்தற்பாலதெனக் கொள்க. சிலர் எங்கும் நிறைந்த பரம்பொருளை ஓர் கருவியில் அடக்கிப் பாவித்தல் பெருங்குற்றமாயினும் அச்சர்வவியாபகனை ஒரு உருவகப் படுத்தாது உள்ளத்தில் தியானித்தல் கூடாது பற்றி எங்கும் நிறைந்தவன் அங்குமிருப்பானென ஓர் எண்ணத்தைப் பற்றுறும் கோடாய்க்கொண்டு பூசித்திடுவோமாயினும் மற்றையக் கடவுளர்க்கு சர்வ வியாபகத்துவமில்லை யாதலால், அவர்களை வழிபடுதல் எவ்வாற்றானு மியையாதென ஓர் ஆசங்கையை நிகழ்த்துவர். மேற்கூறிப்போந்த கீதவாக்கிய உட்பொருளை யறிந்தவர் அப்பரம்பொருளின் திருவருளை எங்கும் நிறைந்ததெனக் கொண்டு தேவர் மக்கள் முதலிய சரீரங்களிலும், புல், பூண்டு முதலிய தாவரங்களிலும், அவனை வழிபடப் பின்னிடார். இனி அப்பரம்பொருள் எங்கும் நிறைந்ததாதலின் சிவபிரான் திருமால் முதலிய பெரிய தேவதைகளைப் பூசித்தலும், பிடாரி முதலிய அற்ப தேவதைகளை ஆராதித்தலும் ஒக்குமோவெனின் இல்லை. ஒரே மண்ணிற் பிறந்ததாயினும், சிறு குடமும் பெருங் குடமும் தத்தமளவிற்குத் தக்க தண்ணீரைக் கொள்ளுமேயன்றி அளவுமிஞ்சிக் கொள்ளாதது போல அவ்வத்திருவுருவி லடங்கிய அப்பரம்பொருளின் திருவருளை வழிபடும் மக்கட்குப் பயனும் அத் தாரதம்மியத்திற் கேற்கவே பிறக்கும். இவ் வபிப்பிராயத்தைக் கொண்டே கீதாசாரியராகிய ஸ்ரீ கண்ணபிரான் எடுத்தோதியதாவது:—"அற்ப தேவதைகளை யுபாசிப்பவர்க்குப் பயன் அற்பமாக முடியும். ஏனைய கடவுளரை வழிபடுவோர் அவரையே அடைவர். என்னையே நம்பினோர் என்னைப்பெறுவர்" என்பது. இனி உலகவாழ்க்கையை விரும்பிப் பெண் பிள்ளைகளும் மற்ற சுற்றத்தார்களும் பெருகவேண்டுமென்றும் புத்திரன், புத்திரி, நாட்டுப்பெண்கள் முதலியவர் விருத்தியடைய வேண்டுமென்றும் இடைவிடாது கருதுமியல்பினர், பரம்பொருளை வழிபடின் அவர்களுக்கு இவ்வுலக வாழ்க்கை கைகூடாது வீடே கிடைக்குமாதலின், பிள்ளை பெண்டிர் பொருள் முதலிய இம்மைப் பயனைக் கொடுக்கும் அற்ப தேவதைகளை வழிபடுகின்றோமெனின், அஃதன்று. பரமேசுவரன் தம்மைச் சர்வவியாபகனென அறிந்து அவனை எத்திருவுருவில் எவர் வழிபடினும் அவ்வழி நின்று அவனவன் கருதிய பயனைக் கைகூடச் செய்வதில் யாதுந் தடையில்லை. ஆதலாற்றான் கீதையில் அர்ச்சுனனை நோக்கி ஸ்ரீகண்ணபிரானருளியது. "புண்ணியசாலிகளான நான்கு வகையுள்ள ஜனங்கள் என்னை வழிபடுகின்றனர். ஓ அர்ச்சுனா! அவர் முறையே உலகத்தை வெறுத்தவன் உண்மையறிய விரும்புபவன், இம்மைப் பொருளைக் கருதியவன்; நல்ஞானத்தை விரும்புபவன் எனப்படுவோர்." என்பது. அவ்விதமே விஷ்ணுப்புராணத்திலும் "கல்ருவம், ஆரோக்கியம், செல்வம், போகங்கள், மக்கள் கருதிய மற்றைய பயன்கள் எல்லாவற்றையும் தம்மை வழிபடுபவர்க்குக் கடவுள் கொடுத்தருள்வது மன்றி முத்தியையுங் கொடுப்பர்" ரென்று எல்லாங் கொடுக்கும் வல்லமை கடவுளிடம் காட்டப்பட்டிருக்கின்றது. கடவுளைத் தியானித்தலால் மனம் ஒன்றுமட்டில் ஒருவாறு சுத்திபெறும். தோத்திரம் செய்வதால் நாவு தூய்மையெய்தும் பிராணாயாம முதலிய யோகங்கள் செய்வதால் சரீரத்தினகக் கருவி

கள் சுத்திபெறும். வெளிப்பூசை செய்வதில் பரம்பொருளாது திருமேனியைத் தியானித்தலால் அகக்கருவிகளும் மற்றைய வெளி வழிபாடுகளால் புறக்கருவிகளும் கடவுள்பால் செலுத்தப்படுகின்றன. தியான பூஜாதிகளை ஒருவன் செய்திடில் அவன்மட்டில் நற்கதி பெறுவானே யன்றி யாம் முற்கூறிய விக்கிரகாராதனத்தால் ஒரு குடும்ப முழுவதும் பெறும் ஓர் நற்பேற்றைப் பெறான். ஒருவன் பூஜை செய்ய, அவன்மகன் மாணாக்கன் முதலியவர் புட்பமுதலிய பூஜோபகரணங்களைக் கொண்டு தரவும், அவன் இல்லாள் பூஜைக்கு வேண்டிய நிவேதனங்களைச் சமைத்தளிக்கவும், அவனுக்குச் சேவகர்களாய மற்றவர்களும் ஒவ்வொரு சமயம் பூஜைக்கு வேண்டிய பொருள்களைக் கடை முதலியவற்றிலிருந்து வாங்கியளிக்கவும் நேரிடுமாதலின், ஒருவன் விக்கிரகாராதனஞ் செய்ய அவனைப்பற்றி மற்றவர்களுக்கும் கடவுளிடம் மனம் சிறிதுகாலஞ் செல்லுகின்றது. அதனால் அவர்க்கும் சிறிது நற்பயன் கைகூடுகின்றது. அவ்யாஜகருணாநிதியாய பரமேசுவரன் சிறிதுகாலமாவது தன்னைத் தியானித்தவர்கட்கு நற்பலன் அளிக்கா தொழியாராதலின், வீட்டில் வசிக்கும் குடும்பத்தோர் எல்லோரும் விக்கிரகாராதனஞ் செய்யாமலும் செய்பவர்க்குத் துணைபுரியாமலுமிருப்பினும் சோற்றைக் கலத்திலிடுங் காலாவது அதில் துளசி வில்வ முதலிய தழைகளை கண்டு இது கடவுளுக்கு நிவேதனஞ் செய்த அன்னமென்று நினைத்தல் இன்றியமையாததாதலால் அந்த முழுச்சோற்றுப் பட்டறும் இவ்விக்கிரகாராதன வழியால் கடவுளை நினைக்க நேரிடுகின்றது. "நினைத்தல், தோத்திரஞ்செய்தல், கேட்டல், கழலைக் கடைப்பிடித்தல், அர்ச்சித்தல், அடிபணிதல், அடிமையாதல், அன்பு செலுத்துதல் ஆவியளித்தல் என ஒன்பதங்கமாது பேரன்பு" என ஆன்றோர் கூற்று விளங்குதலால் பேரன்பு என்னும் பத்தியும் இவ்வர்ச்சனை மென்னும் அங்கமின்றி முற்றுப் பெறாதெனக் கொள்க. விக்கிரகாராதனத்தின் மெய்வருத்தம், பொருட்செலவு, பாவிம்மை இவை சிறிதுங்கிடையாது. தும்பை துளசி பில்வம் அறுகு முதலிய பொருள்களும், [illegible]ரம் நீர் அல்லது பருகுநீரும். உலகத்தி லெங்குமி லமைந்திருக்கின்றன. அதற்கெனச் சிறிதுதூரம் சென்றலைவ ஈசுவரன் நமக்குக் கால்களை யமைத்திருக்கின்றார். அவைகளைக் கொய்து எடுக்க இரண்டு கைகளையும் கொடுத்தார். இனி பத்திரம் புஷ்பம் முதலியவற்றைக் கொண்டுவந்து கடவுளைவழிபட ஆற்றலற்ற நொண்டி முதலியவற்குத் தியானத்தாற்றான் நல்வழி கிட்டுமென உரைக்குங்கால் நீண்ட பருத்த கைகால்பெற்ற யாம் அப்பரமன் திருவுருவாராதனத்தை உபேட்சித்தல் அடாது! அடாது!! தமது அகங்களில் கடவுளை வழிபடுகின்றோமென்று அகங்கொண்டு ஆலயங்களில் கடவுளை வழிபடக் கூடாதெனல் சிற்றறிவுங் கூடாது. ஆலயங்களில் ஆன்றோர் ஒருங்கு சேர்ந்து கடவுளை வழிபடுதலால் அந்த அவரருள் நிறைந்திருக்கின்றது. அங்கும் யாம் அவரை வழிபட வேண்டுவதே. இனி வேத பாஹ்யபாரயுள்ளவர் விக்கிரகாராதனத்திற்குச் சரியான பிரமாணமில்லையெனச் சாதிப்பரேல், அவரை நோக்கி யாம் கேட்கவேண்டுவது இது.-"கடவுளிருப்பதில் நீரறிந்த பிரமாணம் எது?" என்று ஆரியர்களில் எவரேனும் வினவில், நீர் சந்தியாவந்தனத்திற்கு எப்பிரமாணத்தைக் கண்டீர் என மறுவினா வெழும்புவாம். இவ்விஷயத்தில் வேதம், ஆகமம், புராணம், ஆசார முதலிய பல பிரமாணங்களை விக்கிரகாராதன விஷயத்தில் யாம் எடுத்துக் காட்டியிருக்கிறோம். அநேகர் விக்கிரகத்தில் கடவுளை வணங்கி அதனால் அநேகப் பிரத்தியக்ஷ பலன்களைப் பெற்றிருக்கின்றார்கள். உலகத்தில் ஒரே மருந்தைஇரண்டு பிணியாளிகள் உட்கொள்ள, ஒருவருக்குப் பிணி நீங்கியும் மற்றொருவருக்கு நீங்காமலுமிருப்பின், அது மருந்தின் குற்றமெனக் கொள்ளாது பத்திய முதலியவற்றின் குறையெனக் கொள்வது போல இருவர் விக்கிரகத்தை வணங்க, ஒருவருக்குக் கருதியது கைகூடியும் இன்னொருவருக்குக் கிட்டாதிருப்பின், அது விக்கிரகாராதனத்தின் குற்ற

வல்லவென்றும், இவருடைய சிரத்தைக்குறைவே என்றும், கூறத்தடையாதுளது? இக்காலத்து உள்ளவர்கள் விக்கிரகாராதனத்தின் பெருமையை யறியாது வீணில் காலங் கழிக்கின்றனர். உலகத்தில் எவ்வளவோ தர்மங்களிருக்கின்றன. அவற்றுள் பிம்பங்களில் கடவுளை வழிபடுதல் சிறந்தது. இஃது இம்மை மறுமை இருமைப்பயன்களையுங் கொடுக்கும். என்றும் ஒழியாச் சுகத்தைப் பயக்கும். இதற்கெள்ளளவேனுங் குற்றமில்லை. கடவுளைத் தியானிப்பதற்குப் பெரிய ஏது. தமக்கும் மற்றவர்க்கும் பெரிய நேத்திரானந்தம். இவ்வுலகத்தில் பெரும்பான்மையோர் சந்தான முதலிய இம்மைப் பயன்களையே கருதி அநேக தேவாலயங்களில் கடவுளை வழிபட்டுப் பயன்களைப் பெறுகின்றார்கள். மற்றுஞ் சிலர் வெகுகாலம் பிம்பங்களில் கடவுளைப் பூசித்து அவ்வழக்கம் பற்றித் தனது மரணகாலத்திலும் தமது கண்ணுக்குக் கருடாருடரான ஸ்ரீ பகவான் திருவுருவமல்லது விடபாருடரான பரமேசுவரன் திருவுருவம் தோன்றுவதாகச் சொல்வதை யாம் கேட்கின்றோம். ஸ்ரீ கீதாசாஸ்திரத்தில் "எவனொருவன் எவ்வித வாசனையுடன் இச்சடலத்தை விடுகின்றான் அவன் அவ்விதச் சடலத்தையே பெறுவன்" என்று கண்ணபிரான் திருவாய்மலர்ந்தருளியபடி மரணகாலத்தில் கடவுளை மனதில் தியானிப்பவர் முக்தியடைவாரென்பதிற்றடையில்லை. முற்கூறியவாறு கடவுளை வழிபடும் நால்வரும் ஒருவித புண்ணியசாலிகளெனவே கூறப்பட்டமையால் அவ்விதப் பெரும் புண்ணியமற்றவர்க்குப் பிம்பாராதனத்தில் மனஞ்செல்லாது. அவர்கள் காலையிலெழுந்து பற்பல காரியங்களில் முயல்கின்றார்கள். ஒன்றின்பின்னொன்றாக முடித்தபோதிலும் அவர் சித்தத்தில் எக்காலமும் ஏர் கலப்பை முதலியவைகளும் அல்லது வண்டிக்காரர் அடிமைக்காரர் முதலியவர்களும் உழவு, விதைத்தல், தண்ணீர் பாய்ச்சல், களை எடுத்தல், அறுத்தல், களஞ்சேர்த்தல், அடித்தல், மாடுகொண்டு மிதித்தல், தூற்றல் முதலிய தொழில்களும் அவர் மனம் விட்டகல்வதில்லை. இவர் மரணமடைய நேர்ந்தால் அக்காலம் இவர் மனம் அப்பொருளையன்றி வேறு எதை நோக்கும்? இனி என்றைக்கும் அதிகாரியாயுள்ள ஒருவருக்கு அங்கரக்காய்மாட்டி ஆளும் தன் பணிவிடைக்காரன் வாதி பிரதிவாதி சாக்ஷி ஜாமீன்தார் தன் மேல்விசாரணைக்காரன் முதலியவர்கள் அவர் மனத்தில் குடிகொண்டார்களாதலின் அவர்களுக்கு மரணம்நேர்ந்தால் கறைக்கண்டன் அல்லது கண்ணனைத் தியானித்தல் எவ்விதம்? இனி வைக்கில்களாயுள்ளவர்கள் தாம் பிடித்த கக்ஷியின் சாதகபாதகங்களையும் பாதகங்களையொழிக்கும் வழியும் சாக்ஷிகளின் பலாபலங்களும் மனதைவிட்டகலாமலிருக்க, அவர் மரணத்த காலத்திலாவது பாவாஸுதேவன் அல்லது பரமேசுவரனைத் தியானித்தல் எங்ஙனமமையும்? பாருங்கள்! வருடந்தோறும் இத்தேசத்தவர் பணம் ஒருவாறொழிய ஊர்கடோறும் நூதனமாக நியாயஸ்தலங்கள் ஏற்பட இனித் தூரஞ் செல்லவேண்டுவதில்லையென இத் துர்ப்புத்திகள் நினைக்கின்றார்கள். வீண் விவகாரமாடி சர்வ சூன்லரியர்களாய்ப் பரதேசிகளானவர்களைப் பார்த்தும் மென்மேலுமிவர் முயலுகின்றார்கள். இவர் பணத்திற்குப் பங்காளிகளனேகம். அரசன், அவன் பிரதிநிதி, வக்கில், அவன் குமாஸ்தா, சாக்ஷிக்காரர், வண்டிக்காரர், சோற்றுக்கடைக்காரர், மற்றுமனேகர், கடவுள் கிருபையால் சிறிது செல்வம் பெறினும் இப்பொழுது அவனை வழிபடாது உள்ளதையும் ஒழித்துவிடுகிறார்கள். கடவுளளித்த பொருள் கையிலிருக்குங்கால் அவரைப் பூசிக்கவும் அவருடைய தேவாலயங்களை ஜீர்ணோத்தாரணஞ் செய்யவும், அவரை அவ்வாலயங்களில் விதிவழுவாது அர்ச்சிக்கவும் வேண்டுமல்லவா? அங்ஙனமாயின் கடவுளருள் மென்மேலும் பெருக இக்கடவுள் கைங்கரியத்தை மற்றவரும் செய்து நற்கதிபெறுவர். "காசாம்பு நிறம்பெற்ற கண்ணன் திருவடியைப் பெற்றவர் சர்வோத்தம கதியை யடைவாரெனவும், அவர் எவ்விதக் குறைவையும் பெறாரெனவும் அநேக யாக பலன்களைப் பெறுவாரெனவும் பல நூல்கள்

கூறுகின்றன. ஒருவாறு கடவுளை எங்கேனும் ஓர்கோயிலில் வணங்கினால் அதனாலேயே அனேக யாகபலன்கள் கிடைக்க அவைகட்கென யாம் எகத்து வீணில் பணஞ் செலவழிக்க வேண்டுமென்று கருதின், அவ்வித கைங்கரியங்களைச் செய்யச் செப்பச் செல்வமற்றவர்க்கே முற்கூறிய விதியேயன்றி மற்றவர்க்கன்று. ஆதலாற்றான் "கொடையற்ற செல்வவானையும் தவமற்ற தரித்திரனையும்" என்று தொடங்கிச் சாஸ்திரம் விதிக்கின்றது. சர்வரூபியாகிய கடவுளைப் பூஜித்தால் அப்பூஜையால் மரத்தின் வேரில் விட்ட நீரால் கிளை முதலியவைகளும் தளிர்வதுபோல் எவ்வுலகமும் சுகம் பெறும். (இன்னும் வரும்.)

புருஷோத்தமன் அல்லது யாதவ அன்றில்.

(121-ம் பக்கத்தொடர்ச்சி.)

(ஆதித்தன், அ. குமாரகுருபரன்.)

தங்களுக்கு எவ்வித அவசர ஜோலிகளிருப்பினும், எனது வார்த்தையி னிமித்தமாவது, இரண்டொரு நாட்கள் தங்கியே போகவேண்டுமென்று ரங்கநாயகி பன்முறையும் வேண்டுவதை சந்திரசேகரன் கேட்டான். என்னசெய்வான்! குயிலினும் இனியகுரல்வாய்ந்த பெண்கள் தபோசிரேட்டர்கள் நிலைமையையும்மாற்றி விடுகிறார்களென்றால் உலக ஆசையுட்சிக்கி, ராஜ்ய பரிபாலனஞ் செய்யவேண்டுமென்னும் பெரும் எண்ணமே குடிகொண்டிருக்கிற சந்திரனின் மனதின் நிலைமையைச் சொல்வானேன். ஒன்றுந் தோன்றாது விழிக்கின்றான். ஆகா! மந்திரி அழைத்தபடிக் குறிப்பிட்டதினத்தில் போக முடியாதுபோலும்! என்ன செய்வது. என ஒன்றுந் தோன்றாது நிற்கிறான். "பெண்கள்பால் பெற்ற நேயம் பிழைப்பரோ சிறியோர் பெற்றால்" இறுதியாக ஒருபதிலும் சொல்லாதபடி 'உம்' என்று வெளியேவந்து, புருஷோத்தமனுங் கருநில் சிறிதுநேர முலாவிக்கொண்டிருந்தான். புருஷோத்தமன் இந்த விஷயமாக யாதொன்று மறியாதவன்போல் இருந்துவிட்டான். மாலை ஆகாரமருந்தி நித்திரைக்கேகினர். சிநேகிதர் இருவரும் வெகு உல்லாசமாகவே காலங்கழித்தனர்.

இரவு மணி 12-ஆயிற்று. சந்திரசேகரன் தூங்கிவிட்டான். புருஷோத்தமனுடைய மனம் பலவாறு, கூலிக்காக உழைத்துவரும் மின்சாரச் சகடம்போன்று அங்குமிங்கும் படருகிறது. சகடத்தில் குழல் சப்திப்பதுபோல, புருஷோத்தமன் வாய்'உம்உம்'எனப் பலமுறை நெடுமூச்சுடன் கூறுகிறது. இந்த மூச்சின் காரணமென்ன. ஆழ்ந்த யோசனையாகத்தான் இருக்கவேண்டும். என்ன யோசனை?

"ஆமாம். சந்திரசேகரன் இன்று காலை நம்மிடம் போகவேண்டுமென்று எவ்வளவோ துரிதப்படுத்தினான். நாம் தடுத்துப் பன்முறை கூறியும் உள்ளங்கைச் சிரங்கையும் உள்வீட்டுக் கடன்காரனையும் போல், இல்லை. ராஜ்ய விபகாரத்தைப் பார்க்கப்-போகவேணும்' என்று வெட்டுண்ட ஆடுபோல் துடித்தானே. இவ்வாறு துடித்தவன் நம்முடன் சாப்பிட வந்தான். நாமோ சீக்கிரம் சாப்பாட்டை முடித்துவந்தோம். அதுவரை அவன் போவதற்கே சித்தமாக இருந்தான். நானில்லாத சமயம் ரங்கநாயகி ஏதோ அவனுடன் ரகசியம் பேசிவிட்டாள். அதனாலேயே இங்கு தங்கினான். சரி. எனக்கு மனைவியாக வாய்த்த இவளுக்கு அவனுடன் என்ன ரகசியம். அந்தரங்க உடன்படிக்கை இவர்கள் ஏதோ செய்திருக்க வேண்டும். ரங்கம் அவனை இச்சித்திருப்பாள் அவனும் இசைந்திருப்பான் இதுவேகாரணம். ஆகா, இராணியெனப் பட்டத்துடனிருக்கும் இவளுக்கு இது அழகாகுமோ. பூர்வத்தில் பெண்கள் கற்பு நிலைமையால் இறந்த கணவனையும் காப்பாற்றி இருக்கின்றார்கள். அநேக சரிதங்களில் ஆடவர்களே ஸ்திரீகளை அழைத்துச்

சம்போகஞ் செய்திருக்கிறார்கள். அப்படி யிருக்க இந்த ரங்கம் ஓர் சூர்ப்பநகையாகவோ, அல்லது லலிதாங்கியாகவோ சந்திரனை வசப் படுத்திவிட்டாள். அந்தக் கழுதை வசப்படுத்தி னும் சந்திரசேகரனுக்குப் புத்தி யெங்கே போயிற்று. கற்புநிலை யென்பது பெண்களுக்கு மட்டுந்தானா? ஆண்களுக்கு முண்டு அன்றோ. இதை உத்தேசித்தல்லவா ஸ்ரீராமபிரான் சூர்ப் பநகையின் கோரிக்கைகளுக்கு இசைந்திலர். நாம் இனிப் பலவாறு யோசிப்பதில் பிரயோ ஜனமில்லை. அவர்களிருவரும் அந்தரங்க நட்பு கொண்டுவிட்டார்கள். அரசனெவ்வழி அவ் வழி குடிகளெனப் பெரியோர் கூறுவர். இனி அரசி செய்தமாதிரியாகவே எனது நாட்டு ஒவ்வொரு மகளும் சோரம்புக ஆரம்பிப் பள் அன்றோ. ஆனதுபற்றி சிறிது குற்றம் நேரிடினும் பாதகமில்லை. சந்திரசேகரனை இம் மண்ணுலகை விட்டுப் பிரிக்கவேண்டும். இரங் கத்தையுஞ் சிறைபுகுத்த வேண்டும்.

சந்திரசேகரனைஎவ்வண்ணம்இயமன்கைக்கு ஒப்புவிக்கலாம்? தூங்கும்போது வாளிற்கு இரையாக்கி விடுவோமோ. ஆகா! இவ்வித மாக இரத்தக்குறி காட்டினால் எவ்விதமும் நமது செய்கை வெளிப்பட்டுவிடும். மதியூக மந்திரிகள் நமது கபட்டுச்செயலைக் கண்டு பிடித்து விடுவர். ஆனபடி முதன் மந்திரியாகிய மார்த்தாண்டரையும் நம்முடன் சேர்த்து, நமது கோரிக்கையை நிறைவேற்றவேண்டும். சரி. காலையில் சந்திரன் பானஞ்செய்யும் சம யத்து மந்திரிமார் மூலமாய் நஞ்சைச் கலந்துவிடுதலே தகுந்த வழியாகும். உலகமும் சந்தேகிக்காது” என்று முடிவுகட்டி; ரங்கத்தை என்ன செய்ய, கொன்றுவிடுவோமா? சே! ஒரு பெண்பாலையா? பெரிய பாவம். கொலை சந் தேகமின்றி நம்மைச் சூழும். மேலும் ரங்கம் நமக்குச் செய்திருக்கும் உதவிகளும் பலவுள. விவாஹமாகி இந்த இரண்டு வருடகாலமும் ஒருநாளாவது எதிர்த்துப் பேசாதவள், நாண மட மச்சம் பயிர்ப்பு நான்கையும் ஓர் உருவா கக் கொண்டவள், எனக்கு ‘அன்னை தயையும், அடிபால் பணியும், அலர்ப்பொன்னி யழகும், புவிப்பொறையும் வன்னமுலை வேசி துயிலும் விறன்மந்திரி மதியும்—’ தந்தவளன்றோ. ஓர் பெரியகுற்றம், பெண்கள் செய்யவேண்டிய பாதகங்கள் யாவற்றுள்ளும் கொடிய பாதகம். கற்புநிலை தவறிய பாதகம், உலகத்திலே அநீ திக்குக் காரணமான பாதகம், பஞ்சமாபாதகங் களில் முதலாவது பாதகம். இக்கொடிய பாத கத்தைச் செய்தனள். ஆயினும் கேவலம்; பேதமை குடிகொண்ட பெண் என்னசெய் வாள். துஷ்டப்பயல் சந்திரனே கெடுக்கத் துணிந்தனன். ஓர் பெண்பால்தான் மற்றொரு ஆடவனைப் புணர்ந்ததாக எவ்விதத்தாலும் கூறவேமாட்டாள். ஆனபடியில் ரங்கம் உயி ருடனிருப்பதிற் பாதகமில்லது. ஆயினும் பர புருடனை இச்சித்த அவளை இனி என்னோடு சேர்க்கேன். ஆதியில் சீதா அசோகவனத்து கணவனைப் பிரிந்து தனது கற்பைக் காப்பாற் றிருந்தமாதிரி, இந்த ரங்கத்தை கற்பை இழந்த தற்காகச் சிறையிலே வைப்பேன். அவள் எனக்கு மனைவி என்னும் பாந்தத்தையும் நீக்கி விடுவேன். எஃது எவ்வாறாயினும் துஷ்டப் பயல் சந்திரனை ஏமாற்றிக் கொன்றுவிடுவேன். இன்றேல் என்னையும் எனது குடும்பத்தையும் பற்றி அவன் எவ்வளவு கேவலமாக நினைப் பான். பிறரிடத்துஞ் சொல்லிவிடின் அதை விடக் கேவலம் வேறுண்டோ? என் மனையாள் வேசை என்ற சொல்லை நான் கேட்பதைவிட உயிரை இழப்பதே உசிதமல்லவா. நான் உயி ரிழந்து, அதன்பலனால் ரங்கம் எப்படியும் கொஞ்சமாவது துக்கங்கொள்ள, அதனால் மைந்தனும் வாட்டமுற, அரசனுடைய கவலை யைக்கண்டு அரண்மனையிலுள்ளோர் கிலேசப் பட, இதையறிந்த நமது குடிகளும் பெருந்துக் கத்துள் மூழ்குவார் அன்றோ. இத்தனை ஜனங் களையுந் துக்கப்படுத்தாது ஒழிக்க சந்திரசே கரனையே மருந்திட்டுக் கொன்றுபோடுவேன் என்று கங்கணம் கட்டினன். இரவு முழுவதும் தூங்கவில்லை. கோபம் தன்னையறியாது எழும் பும் பின் தாழும்.

மூன்றாம் காட்சி.

விடியற்காலை மணி 5-இருக்கும் புருஷோத்தமன் படுக்கையைவிட்டு எழுந்துவந்து, அரண்மனைக் காவலனிடம் சென்று, முதன் மந்திரியை யழைத்துவரும்படி யேவ, முதன் மந்திரியும் வந்துசேர்ந்தார். சிறிது நேரத்தில் அரசன் மார்த்தாண்டரிடத்தில் தன் மனைவியின் தவறான நடத்தையையுஞ் சொல்லி, இதனால் சந்திரசேகரனைக் கொல்லவேண்டியது பெரிய அவசிய மென்பதையும் மிகவும் வற்புறுத்திக் கூறி அதற்குத் தான் கண்டுபிடித்திருக்கும் முறையையும் அறிவித்தான். என்னசெய்வார் அமைச்சர். ராஜன், ராணி, இளவரசன், துணை மந்திரிகள், தேசத்திலுள்ள ஒவ்வொரு குடிகள் ஒவ்வொருவரியல்பையும் தனது இதயத்தில் இம்மிதவறாது அமர்ந்துவைத்திருக்கிற மந்திரி இவ்விஷயத்தில் தவறுவாரோ! தாகவிடாய் கொண்டவனுக்குக் கானலெல்லாம் நீர்நிலை போலவும், சூர்ப்பனகை கண்ணிற்கு கண்ட ஆடவர் யாவரும் இராமன் போலவும் இராவணன் கண்ணிற்கு எதிர்வந்த பெண்கள் யாவரும் சீதைபோலவுந் தோன்றியதுபோல், ஏதோ சந்தேகம் தனது இராஜனுக்குச் சிறிது மனதில் உதித்ததென்றும், அதன் பலனாகப் பின்னர் ரங்கநாயகி செய்ததை எல்லாம் சந்தேகிக்க நேர்ந்துவிட்டதென்றும், திண்ணமாக நினைத்தார். இப்போது ஆணையை நிறைவேற்றவும் பிரியமில்லை. அரசனிடம் மறுத்துரைக்கவும் நாவெழுகிறதில்லை எனினும் அரசனுக் கிசைந்தவர்போல 'சரி, அப்படியே செய்கிறே'னெனச் சொல்லிப் போந்தனர்.

சிறிது நேரத்திற்கெல்லாம் சந்திரசேகரன் மார்த்தாண்டரைக் கண்டான். மார்த்தாண்டர் முகம் ஓர் விதமாக வெளிற காந்தவிளக்குத் தரும் வெளிச்சம்போல் பொலிவற்றிருந்ததைப்பற்றி, 'அமைச்சே! நீவிர் ஏதோ ஒன்றைச் சிந்திப்பவராகத் தோன்றுகிறது. யானுமதை யுணரலாமோ' என்றனன். உடனே மார்த்தாண்டர் தலைகுனிந்து கண்ணீராக ஆர்த்தனர்.

சந்தி:—மார்த்தாண்டரே! என்ன சங்கதி. ஏதோ ஆதனமாக இருக்கின்றதே. ரத, கஜ, துரக, பதாதியெனும் நால்வகைச் சேனையும் புறங்கொடுத்தபோதும், தேகபலத்தை விட்டு மனோபலத்தால் யாவற்றிலும் சித்திபெறுந் தாங்கள் இவ்விதமாக கலக்கமுற்றதை அறிவிக்கவேண்டும். இன்றேல் தங்கள் என் மனதைப் பெரும்பாலும் புண்படுத்துகின்றீர்கள். என்மனம் இப்போது கரைகிறது. (என, கண்களில் நீர் ததும்பிற்று.)

மார்த்:—மன்னர் ஏதோ. நான் இப்போது இருதலைக்கொள்ளி எறும்புபோல சிக்கிவிட்டேன். தாங்களும் புருஷோத்தமரும் எனக்கு இப்போது இத்துன்பத்தைக் கொடுத்துள்ளீர்கள்.

சந்தி:—என்ன, அது. நானா துன்பத்தைக் கொடுத்தவன். என்று, எவ்விதம், எங்கே, என்னவிஷயமாய். கூறும் இப்போதே எனது உயிரையும் அளித்து உம்மை அத்துன்பத்திலிருந்து விடுவிக்கின்றேன். ஆதியில் சிபி கேவலம், ஒரு புறாவிற்காக உயிரைவிட்டிருக்க ஆறறிவுடன் கூடிய மானிட ஜென்மத்துள் சிரோரத்தினமாய் விளங்கும் உம்மை நான் பாலிக்காத விஷயத்தில் அரசன் ஆவேனோ? மந்திரியே! சத்தியமாகவே யாதொன்றையும் ஒளியாது கூறும்படி வேண்டுகிறேன்.

மார்த்:—சந்திரசேகரரே! நீவிர் முன்னர் எமது மன்னன் இங்கு தாமதிக்க வேண்டிய போது மறுத்துப் பின்னர், சாப்பாட்டுவேளையில் ராணியின் வேண்டுகோட்கிணங்கி இருக்கின்றீராம். இச்செயலானது புருஷோத்தமனை, ரங்கத்திற்கும் தங்களுக்கும் ஊடுகாதல் மீறி ஒருவரிடம் மற்றவர் அந்தரங்க நட்புகொண்டு இருப்பதாகச் சந்தேகிக்கச் செய்திருக்கிறது. ஆனபடியால் புருஷோத்தமன் பங்கமாகிய ரங்கத்தை வைத்திருத்தல் தனக்குக் கேவலமென்றும், தங்களை உயிருடன்விடில் நடந்திருக்கும் சேதியும் உலகுள் பாவி எங்கும் நிலைத்துவிடும் என்றும் அஞ்சி தங்களை, காலை ஆகா

ரத்தில் நஞ்சுகலிட்டுக் கொல்லும்படி உத்தரவளித்தான்—என்று இவ்வாறு சொல்வதற்குள் தேம்பித் தேம்பி நாவெழாது கண்ணீர் சொரிந்து நின்றான்.

சந்திரசேகரனுக்கு யாதொன்றும் தோன்றுகிறதில்லை. இடியோசைக் கேட்ட சர்ப்பம் போல் கலங்கி, தனது மனம் அங்குமிங்கும் செல்லாது பிரமித்து நின்றான். 'ஆ! என்னே புத்திபுருஷோத்தமன் என்னை இப்படிநினைக்கத் துணிந்தானோ? விதியை நொந்துகொள்ள வேண்டியதே யொழிய அவனை நினைந்து என்னபயன். உத்தமனுக்கு இந்த ஆகமப்புத்தி வந்ததும் என்ன கொடுமையோ. ஆ! மார்த்தாண்டரே. இதைப்பற்றிப் பலவாறு யோசிப்பதிற் பிரயோஜனமிலது. உமது க்ஷேமத்தைக் கருதி யாதொரு வார்த்தை கூறுவேன் கேட்பீராக. நீரோ யாதொரு குற்றமுமற்றவர். அதிக மதியூகி. அரசனுக்கு ஓர் கண்போன்றவர். அரசன் உமக்கு இப்போது ஏவிய கட்டளை நி தும் உமக்கு ஒப்பாததென்பது எனக்கு நன்கு தெரியும். அப்படியின்றி ஒப்புவதாகத் தோன்றின் அவர் ஆணைப்படியே என்னை நடத்தும். நான் அதற்கு எனது மனப்பூர்வமாக என்னை ஒப்புக்கொடுக்கின்றேன் என்றான்.

மார்த்:—'மன்ன, தங்களை நான் தென்னவனுலகனுப்புவதைவிட, என்னை மாய்த்துக் கொள்ளுதல் மேலாகத் தோன்றுகிறது. இதுவே சிறந்த வழியாக உலகு மொப்பும்.

சந்தி:—'மார்த்தாண்டரே. எனக்கு ஓர் யோசனை தென்பட்டது. யாவருக்கும் இன்பத்தை யளிக்கும்வழி. நீவிர் என்னுடனே வந்து எனக்குப் பிரதமமந்திரியாக இரும். இதைப்பற்றி நீர் யோசிக்கவேண்டாம். விபீடணர் ஆதியில் ஸ்ரீராமபிரானுடன் சேர்ந்தொழுகவில்லையா. இதுவே தகுந்தயோசனை யோசிப்பதிற் பிரயோஜனமில்லை புறப்படும்.

(இருவரும் சுந்தரபுரி சேர்ந்தனர்.)

நான்காம் காட்சி, நீதிஸ்தலம்.

சீருஞ் சிறப்புமாக, பல்லாயிரக் கணக்காகச் செலவுசெய்து, இந்திரபுரியை நிகரும்படி பட்டணத்தை அலங்காரஞ்செய்து மறையோன் உற்றார், உறவினர், பஞ்சபூதங்கள் சாக்ஷியாக நான் மணந்த ரங்கநாயகி, நம்பிக்கைத் துரோகஞ் செய்து என்னை நிந்தனைக்குள்ளாக்கினளல்லவா சரி. இவைதக்கீ இன்று விசாரிக்க வேண்டும். சேவகர்காள்! போய் இரங்கநாயகியை அழைத்து வாருங்கள்.

சேவகர்:—மஹாராஜ் ஆஞ்ஞைப்பிரகாரம்.

(குழந்தையுடன் தாய் வருகிறாள்.)

புருஷோ:—ஏ கள்ளி நீ இங்கு அருகில்வர யாதொரு யோக்கியதையும் கிடையாது. அப்படியே அங்கு நிற்பாய். (சீற்றத்துடன்.)

ரங்க:—நாதா! என்ன காரியம். ஒருகாரணமில்லாத விதமாக இன்னதற்குக் கூறுகிறீர்கள். என் இந்தக்கோபம். 'ஆறுவது சினம்' என்று பாட்டி சொல்லியிருக்கிறார். சகல பாவங்கட்கும் கோபம் வழிகாட்டும். சிறிது சாந்தங் கொள்ளுங்கள்.

புருஷோ:—சீ! லண்டி, என்னபுத்தி புகட்டுகிறாய். சந்திரசேகரனைப் புணர்ந்த வேசையிடமிருந்தா நான் கல்வியறிவு பெறவேண்டும். வேசை. உன் சாமர்த்தியமறிவேன்.

ரங்க:—(அடிவயிற்றில் நெருப்புப்பற்றியவள் போலவும், தசரதச் சக்ரவர்த்தியிடம் விஸ்வாமித்திரர் தாடகை வதத்திற்கு இராமனைக் கூப்பிட்டபோது அரசன் என்ன உணர்ச்சி பெற்றானோ அதற்கு மேலான உணர்ச்சியுடனும்) அரசே! என்ன சொன்னீர்கள். எனக்கு உடல், பொருள், ஆவி, இன்பம், போகம், ஆடை, ஆபரணம் முதலிய யாவும் தாங்களாகவேயிருக்க, அடியாள் மற்றொருவனை எட்டிப் பார்க்க என்ன அவசியம் வந்தது. என்மேலே வித்தப்பபிப்பிராயம் கொண்டீர்கள். யார் இந் நிந்தையைப் புகட்டிவிட்டார்.

புருஷோ:—அடீ! பலவாறு நடிக்காதே. உன் கதை எனக்குத் தெரியும். நீ அன்னம், காய்கறி பதார்த்தங்கள் வைக்கும்போதும் நெய் வார்க்கும்போதும், நான் நன்றாய்க் கவனித்தேன். கொண்டகணவன் கேவலமாகவும் கண்ட ஒருவன் தெய்வமாகவும் உனக்குத் தோன்றினனல்லவா? சரி! பார் வேடிக்கை.

(தொடரும்.)

பல்லவரா, கள்ளரா?

(ஸ்ரீமான் பி. டி. ஸ்ரீனிவாஸ அய்யங்கார் 'சுதேசமித்திர'னில் எழுதியது.)

———— o) ————

நம் பாரதநாட்டுப் பண்டைய காலத்து வரலாறுகளைக் கூறும் இதிகாச புராணங்களில் பல்லவர் என்ற பெயர் சகர், யவனர் என்றும் மக்கள் வகைப் பெயர்களுடன் அடுத்தாவது சக யவன பல்லவர்கள் என்று சமாசமாயாவது வழங்கப்பெறும். இப்போது ஆங்கிலம் கற்பவர் இச்சமாசத்தில் உள்ள யவனர் என்பவர் கிரேக்கர் என்கிறார்கள். கிரேக்கர் என்பது பிற்காலத்திலுண்டான தப்பான பெயர். அவர்களில் ஒரு பாலார் யவனர். கி. மு. 7-ம் நூற்றாண்டுக்குப் பின் யவனே என்ற மொழி இயோன என்று மாறியது. இதுதான் ஆங்கிலம் கற்பார் (Ionien) என்பது சம்ஸ்கிருதத்தில் இயோனியன் என்றால் யவன என்பதால் அப்பெயர் யவன என்று இருந்த பண்டைய காலத்திலேயே கிரேக்கர் நம் நாட்டுக்கு வந்துகொண்டிருந்தாரென்பதற்கு அத்தாட்சி.

இது நிற்க, சகரும் பல்லவரும் சகத்தீபம் என்ற நாட்டுப்பகுதியில் உண்டானவர். சகத்தீபம் என்பது ஜம்புத்தீபம் என்னும் இந்தியாவுக்கு வடமேற்கில் உள்ளது. இப்போது (Persia) என்பது முதல் (Asia Minor) என்பது வரையில் உள்ள தேசம். சகத்தீபத்தில் சகரும் பல்லவரும் வெகுகாலமாய் கலந்திருந்ததால் ஓரினத்தாராய் சகபல்லவரென்ற தொகைப் பெயரைப் பெற்றார். பாரசிக மொழியில் பல்லவரைப் பார்த்தவரென்பர். இந்த நாமத்தில் உள்ள தகாரம் தவர்க்கத்தின் இரண்டாவது எழுத்து பார்த்தவர் என்னும் பாரசிகச் சொல் சம்ஸ்கிருதத்தில் பஹ்லவரென்றும் வழங்கில் பல்லவரென்றும் மருவியது.

கி. மு. ஆறாம் நூற்றாண்டில் சக பல்லவர்களில் சிலர் ஆப்கானிஸ்தானத்துக்கும் (அதாவது காந்தார தேசத்துக்கும்) பாரசிகத்துக்கும் நடுவில் உள்ள நாட்டில் பிரவேசித்தார். அதனால் அதற்கு சஹஸ்தானம் என்ற பெயர் உண்டாயிற்று. இப்போது சைஸ்தான் என்பர். அக்காலத்தில் நாமிப்போது இந்தியர் என்ற புறமொழிப் பெயரால் குறிக்கும் பாரத வர்ஷமானது பாரசிகம் வரையில் பரவியிருந்தது. ஆகையால் பாரத வர்ஷத்துக்குள் சகயவன பல்லவர் வெகுகாலத்துக்குமுன் நுழைந்தார். ஆனாலும் இவரை மிலேச்சராய்த் தான் நம்முன்னோர் எண்ணியிருந்தார். மிலேச்சர், என்றால் மூர்க்கர் என்ற பொருளல்ல. மிலேச்சர் என்றால் புறநாட்டார், ஆரிய முறைகளான யாகங்களுககு எஜமானராகத் தகாதவரென்ற பொருள்.

எனினும் சகயவன பல்லவர்கள் பாரத வர்ஷத்தில் குடியேறினதுமுதல் அப்போது பரவியிருந்த வைணவ, சைவ, பௌத்த சமண நெறிகளைத் தழுவினார்கள். இந்த நான்கு முறைகளை அக்காலத்தில் வைதிக முறைகளாக எண்ணியிருந்தார்கள். வைணவம், சைவம், இவை யிரண்டுமாகிய ஆகமமுறைகள் வைதிக முறைகளல்ல யென்று நான் இங்கு சொல்வதைக்கண்டு என் நண்பர் பலருக்கு அடங்காச்சினம் உண்டாகும். இக்கூற்றை 25 ஆண்டுகளுக்கு முன் நான் ஆங்கிலத்தில் எழுதின Outliens of Indian Philosophy என்ற நூலில் பிரமாணங்களுடன் ஸ்தாபித்திருக்கிறேன். வேண்டுமானால் தமிழில் இந்த விஷயத்தைப்பற்றி மற்றோர் விரிவுரை எழுதுவேன் என் நண்பர் சினம் கொள்ளாது இப்போதுமட்டும். இந்தக் கொள்கையை ஒப்புக் கொள்ளக் கோருகிறேன்.

சக யவன பல்லவர் ஆகமத் தொழுமுறைகளைச் சேர்ந்ததற்குக் கல்வெட்டுகள் முதலிய அத்தாட்சிகள் பலஉள. அக்காலத்திலும் சரி, பிற்காலத்திலும் சரி, அரசு புரிவோர்களை க்ஷத்திரியர்கள் என்பது உண்டு. பிராமணர்கள் கூட அரசுபுரிந்தால் க்ஷத்திரியர்களாவது வழக்கம். தென்னிந்தியாவில் கி. பி. 4-ம் நூற்றாண்டில் மயூரசர்மா என்ற பிராமணன் அரசனானான். அவன் ஏற்படுத்திய அரசகுலத்துக்குக் கதம்பர்குலம் என்று பெயர். அவன் பிள்ளை

முதலாக அவன் பின்னேர்கள் க்ஷத்திரியராய் வர்மா என்ற பட்டம்தரித்து ஆயிரம் வருஷம் வனவாசி வைஜயந்தி (கன்னடநாட்டிலுள்ளது) யிலும் கோவர்புரத்திலும் ஆண்டார். சூத்திர குலத்தில் பிறந்து, அரசரானபின்பு க்ஷத்திரியர்களாய் வாழ்ந்த குப்திருடன் கதம்பர் சம்பந்தங்கள் செய்தார் இவ்வரே பல்லவ அரசரை தாழ்ந்தசாதி க்ஷத்திரியராகச் சேர்த்துக்கொண்டார்கள். புராணங்களிலும் தர்ம சாஸ்திரங்களிலும் சக யவன பல்லவர்களை நீச சாதி க்ஷத்திரியர்களாக ஒரு வாசிஷ்டகுல முனிவர் ஏற்படுத்தினரென்று சொல்லியிருக்கிறது.

கி. மு. 5-வது நூற்றூண்டில் சக பல்லவர் பலமுயர்ந்தது, தக்கசிலை (ராவல் பிண்டிக்கு 2-மைல தூரத்திலிருக்கிறது.) வடமதுரை, சௌராஷ்டிரம், மாளவம், காஞ்சிபுரம், முதலிய இடங்களில் முறையே அரசரானர். மாளவத்தில் உஜ்ஜயினிநகரில் ஆண்ட ஒரு சக அரசனை மூலநாளுக்கு அருகில் உள்ள சகரில் விக்கிரமாதித்தியன் என்ற பட்டம் தரித்த அரசினெருவர் தோல்வியடித்து, கி. மு. 50-ல் விக்கிரம சம்வத்ஸரம் என்ற காலக் கணக்கை ஏற்படுத்தினன். பின்பு கி. பி. 77-ல் ஒரு அரசன் (அவன் பெயர் சஷ்டணன் என்பது என் சொல்லை) மறுபடியும் உஜ்ஜனி அரசனைப், அபிஷேகம் பெற்ற காலத்திலிருந்து மற்றொரு காலக்கணக்கை ஏற்படுத்தினன். அதற்கு இப்போது சாலிவாகன சகாப்தம் என்று பெயர். இந்த சஷ்டணன் பேரன் ருத்திரதாமன். இவனது கல்வெட்டு முதல் முதல் சம்ஸ்கிருதத்தில் எழுதிய கல்வெட்டு] கூர்ஜரத்தில் கிர்னர்மலைமேல் இருக்கிறது. இவன் காலத்துக்கு முன் கல்வெட்டுகள் பிராகிருதத்தில் தான் உண்டு. இதனால் சக பல்லவர் வடமொழி பயின்று அதை அதிகமாக ஆதரித்தார் என்று அறியலாம். காஞ்சிபுரம் பல்லவரும் வடமொழிப் பயிற்சியை ஆதரித்து கடிகை (என்றால் கல்லூரி) ஒன்றை அவ்வூரில் ஏற்படுத்தினர். மேலே சொன்ன மயூர சர்மா, கதம்ப குலஸ்தாபகன், காஞ்சிபுரக் கடிகையில் படிக்கவந்தவன்.

பல்லவ அரசர் முதலிய அனர்யமன்னரை ஈனகுல க்ஷத்திரியராய் முற்காலத்தில் ஒப்புக்கொண்டார் என்றேன்; அதனால் பல்லவர் எல்லோரும் க்ஷத்திரியராகவில்லை, அரசர்களுக்கே அப்பதவி கிடைத்தது. பிற்காலத்தில் ஆண்ட தஞ்சாவூர்ச் சோழ அரசரையும், மதுரையில் ஆண்ட பாண்டிய அரசரையும், க்ஷத்திரியர்களாகக் கொண்டாடி, அவர்களுதவியைக் கொண்டு யாகங்கள் செய்து பிராமணர்கள் தட்சிணைபெறுவது வழக்கமுண்டு. அரசர்களை க்ஷத்திரியராய்க் கொண்டாடினுல் அவர்கள் உறவினர் மற்றவரது சாதி என்ன? சூத்திர சாதியா? என்ற கேள்வி விடையளிப்பதற்கு எளிதான வினவல்ல. வர்ணம் சாதி என்ற இந்த விஷயத்லதப்பற்றி எனக்குச் சரித்திர ஆராய்ச்சியால் தெரிந்தமட்டும் மற்றொரு விரிவுரை எழுதி விளக்குவேன்.

காஞ்சிபுர பல்லவ அரசரைப் பாரத்வாஜ கோத்திர க்ஷத்திரியாக ஒப்புக்கொண்டு அவரை அக்னிஷ்டோமம், வாஜபேய, அச்வமேதயாகங்களுக்கு எஜமானராய் வைத்து யாகம் செய்து பல கிராமங்களைப் பிராமணர்கள் தானம் பெற்றதாக தாமிரப்பட்டயங்களிலிருந்து தெரியவருகிறது. இந்தப் பல்லவர் வடக்கிலிருந்து வந்தவரோ; அங்கிருந்து பல பிராமணர்களை வரவழைத்து யாகங்கள் செய்தார். கொஞ்சகாலம் வரையில் தமிழருடன் பல்லவ அரசர் சம்பந்தங்கள் செய்யவில்லை. ஆரிய முறைகள் (என்றால் வைதிக யாகங்கள்) முதலில் தமிழர் பரவவில்லை எனினும் கரிகாலன் காலத்தாக்குள் பரவின்தாகத் தெரியவருகிறது. அவன் இறந்தபோது தர்ப்பைப் புல் போட்டு, தகனம் செய்ததாக புறப்பாட்டு ஒன்றிலிருந்து ஊகிக்கிறேன்.

முறையே பல்லவ அரசரும் தமிழருடன் சம்பந்தங்கள் செய்யத் தொடங்கினர்கள். கி. பி. 600ல் வாழ்ந்த மகேந்திர வர்மனுக்கு சங்கீர்ணஜாதி என்ற பட்டப்பெயருண்டு. ஆகையால் பல்லவத் தகப்பனுக்கும் தமிழ்த் தாய்க்கும் பிறந்தவன் என்று ஊகிக்கிறேன். பின்பு பல்லவர்கள் தமிழ் நாட்டில் இருந்தவர் தமிழராயும் தெலுங்கு நாட்டிலிருந்தவர் தெலுங்க

ராயுமாய் விட்டனர். ஆயினும் பல்லவர் காடவர், காடுவெட்டி என்ற குலப்பெயரை விடாமல் வைத்துக்கொண் டிருக்கிறார்கள்.

இது நிற்க பல்லவ அரசருடன் தென்னாட்டுக்கு வந்த சாதாரண பல்லவர் (அரசராகாதவர், சேனைவீரர் முதலியோர்) முதலிலிருந்து தமிழரோடு சம்பந்தங்கள் செய்திருக்கவேண்டும். வடக்கிலிருந்து வந்த பல்லவ குலத்தோரெல்லோரும் தங்கள்குல ஸ்திரீகளைக் கொண்டுவந்து, அவர்களையே மணம் புரிந்து, வேறு சாதியாருடன் கலக்காமல் இருந்தாரென்பது நம்பத்தக்கதல்ல. அரசரல்லாத பல்லவர்கள் க்ஷத்திரியர்களாக க்ஷத்திரிய தர்மம் எல்லாவற்றையும் நடத்தினதாக பிரமாணம் ஒன்றையும் காணேம். எனினும் இவர்களை சூத்திரர்என்று சொல்லமாட்டேன். பல்லவரென்றே வாழ்ந்து வந்தனர்.

இளந்திரையன் பல்லவனோ, சோழனோ, நிச்சயமாய்ச் சொல்ல இயலாது. பல்லவருக்கும், தமிழருக்கும் சம்பந்தங்கள் ஏற்பட்ட பின்பு, கலப்பினால் பிறந்தவனோ தெரியாது. அவனைப்பற்றி அற்புதக்கதை ஒன்று சொல்லுகிறார்கள். அற்புதக் கதைகள் சரித்திரத்துக்கு உதவா. எதற்காகவோ அவன் உற்பத்தியைக் குறித்து அற்புதக் கதையை இயற்றினார்கள். இளந்திரையனுக்குத் தொண்டைமான் என்ற பட்டம் உண்டு. தொண்டைமான் என்றால் தொண்டைநாட்டுப் பெரியோன் என்ற பொருள். எந்தச் சாதியாரும் தொண்டைமானாகலாம்.

இது நிற்க, தொண்டைநாட்டில் முற்காலந் தொடங்கி கள்ளர் என்னும் சாதியார் சிலர் உயர் நிலையிலும், சிலர் தாழ்நிலையிலும் வாழ்ந்தார்கள். கள்ளர் என்னும் மொழிக்குத் திருடர் என்று ஒரு பொருள் இருப்பதால் கள்ளர் திருடும் தொழிலைப் பின்தொடரும் சாதியார் என்றகொள்கை பரவியிருக்கிறது. திருடுவதற்காக ஒரு சாதியார் தமிழரில் உண்டானர் என்பது நம்பத்தக்கதல்ல, நகைக்கத்தக்கதே. அன்றியும் கள்ளசாதி அரசர்களும் பிரபுக்களும் பலர் எப்போதுமுண்டு. கள்ளரைத் திருடர் என்பதுபோலவே சிலர் சோழர் என்னும் மொழி சோரர் என்பதின் மருவு. அவரும் திருடர் என்று கூறுவர். இதுவும் நகைக்கத்தக்க கொள்கை; பழையகாலத்தில் கள்ளர் வேங்கடமலை நாட்டில் யானைகளைப் பிடித்துப் பழக்குந் தொழிலைக் கைக்கொண்டவர் என்று பழந் தமிழ்ச் செய்யுட்களால் தெரியவருகிறது. ஆகையால் கள்ளர் என்ற மொழியும், களிறு என்ற மொழியும் ஒரேவேர் சொல்லிலிருந்து பிறந்திருக்கலாம் என்று எனக்குத் தோன்றுகிறது. தமிழில் வேர்ச்சொல்கள் ஆராய்ச்சி (etymology) இன்னும் எவரும் செய்யவில்லை. களிறு 'கள்' என்னும் வேர்ச்சொல்லிருந்து உண்டாயிருக்க வேண்டும். 'கள்' என்பதற்கு 'வன்மை' என்பது பொருப் பொருளாய்த் தோன்றுகிறது. ஆனால் இந்தக் கொள்கையை இன்னும் ஆராய்ச்சி செய்யாமல் ஐயமற்றது என்று சொல்ல மாட்டேன். காடவ (பல்லவ)ப் பிரபுக்களும் கள்ளப் பிரபுக்களும் ஒரேமண்டலத்தில் வாழ்ந்ததால் இவ்விரு குலத்தாருக்குள் சம்பந்தங்கள் ஏற்பட்டன. இவ்வாறே தெலுங்கு ரெட்டிகளுக்கும் தெலுங்குப் பல்லவருக்கும் சம்பந்தங்கள் ஏற்பட்டன.

கி. பி. 600 முதல் காஞ்சீபுரப் பல்லவர் ஆட்சியின்கீழ் சோழநாடு முழுவதும் வந்தது. அப்போது முதல் தொண்டைமண்டலத்தார் பல சாதியார் சோழநாட்டில் குடியேறினார்கள். கார்காத்த வெள்ளாளர், கள்ளர், பல்லவர் முதலியோர் பலர் காவிரிப் பள்ளத்தாக்கில் பரவினார்கள். கி. பி. 900-ல் பல்லவர் அரசாட்சி இறந்தது. பல்லவப் பிரபுக்கள் பலர் சோழர்கீழ் உயர்ந்த வேலைகளில் அமர்ந்தார். அன்றியும் தொண்டை நாட்டில் குறுநில மன்னர் ஆண்டார்கள். சோழர் பலம் குறைந்த போது அவருக்கு விரோதமாய்ப் போர்கள் செய்து சிலகாலம் சக்கரவர்த்திகளாயும் ஆனார்கள். கோப்பெருஞ் சிங்கதேவன் இவ்வாறு உயர்நிலை பெற்றவரில் ஒருவன். அக்காலத்தில் அறந்தாங்கி, கலசமங்கலம் முதலிய ஊர்களில் பல்லவராயர்கள் என்ற பிரபுக்கள் ஆண்டார்கள். இப்போது புதுக்கோட்டையை ஆளும்

அரசர் குலம் முன்னிலை வருவதற்குமுன் அம்புக்கோயிலில் குடியேறின தெலுங்க பல்லவ குலம். இக்குலத்தவர் கள்ளருடன் சம்பந்தங்கள் செய்தார்கள்போலும். ஆனால் தெலுங்கரானதால் அவரைக் கள்ளர் சாதியில் சேர்ப்பது பிசகு. இக்குலத்தவர்க்குப் பல்லவரென்று தொன்றுதொட்டு குலப்பெயருண்டு. குலப்பெயர் பாரம்பரையாய் வருமேயன்றி, மாறிவாராது. இக்காலத்தில் சிலர் ஒரு சாதியிற் பிறந்து மற்றொரு ஜாதியைச் சேர்ந்தவர்என்று கூறுவதன்றி. வெள்ளாள குலம் முழுவதும் மற்றோர் குலமாகாது. பல்லவராகாதவர் ஒருவர் இதுவர் தாம் பல்லவரென்று பொய்யாய்ச் சொல்லிக்கொண்டால், அவர் குலம் மாறுது. அவரிருந்தவிடம் வழக்கமான குலப்பெயரே ஒட்டிக்கொள்ளும். இதைப்பற்றி அதிகமாய் எழுத வேண்டியதில்லை.

காஞ்சிபுரத்தை ஆயிரம் வருஷங்களாக ஆண்ட பாரத்துவாஜ கோத்திரப்பல்லவ அரசர் சந்ததியார்கள் இப்போது இருக்கிறார்களோ, அவர்கள் க்ஷத்திரிய தொன்மையை இன்னும் விடாமல் காப்பாற்றிக்கொண்டு வருகிறார்களோ எனக்குத் தெரியாது. ஆனால் எனக்குத் தெரிந்தமட்டும் பல்லவகுலத்தார் க்ஷத்திரிய தர்மத்தைப் பின்தொடரவில்லை. பேர் மாத்திரமே அவர்களுக்கு இருக்கிறது. அப்படிப்பட்ட பல்லவர்களேயன்றி இப்போது ஆளும் புதுக்கோட்டைத் தொண்டைமான்கள் கள்ளர் அல்ல. தொண்டைமண்டலத்திலிருந்து இவர் முன்னோர்கள் வந்தகால இவர்க்குத் தொண்டைமான் என்ற பட்டம் வந்தது. பல்லவ குலத்தவராதலால் பல்லவராயர் என்ற பட்டமுமுண்டு.

Parthia என்று ஆங்கிலத்தில் சொல்லும் நாட்டில் உதித்து, பாரதவர்ஷத்தில் வந்தவுடன் பல்லவரென்ற பெயருண்டாய், காந்தார, சௌராஷ்டிர, மாளவ, மகாராஷ்டிர, தெலுங்கு, தமிழ் நாடுகளில் பல்லவர்கள் பரவினார்கள். காஞ்சிபுரத்தில் ஆண்டவர்கள் பாரத்துவாஜ கோத்திர க்ஷத்திரியராய் விளங்கினார்கள். ஆரியமுறைகள், ஆரியக்கல்வி, ஆரியவழக்கங்களைத் தென்னாட்டில் பரப்பினார்கள். இவர்களைச் சேர்ந்தவர்கள் பிற்காலத்தில் தமிழராயும், தெலுங்கராயும் ஆனார்கள்; ஆனால், பல்லவரென்கிற குலப்பெயரை மாத்திரம் விடவில்லை. அந்த தெலுங்கப் பல்லவரில் ஒரு வீட்டார் புதுக்கோட்டை அரசர்கள்.

———(o)———

ஓர் ஆட்சேபம்.

புதுக்கோட்டை யரசர்கள் பல்லவர்களா ?

(சேலம் க்ஷத்திரியனில் பூபதி என்பவர் எழுதியது.)

——— o)———

திருச்சி ஸ்ரீமான் பி. டி. ஸ்ரீனிவாசய்யங்காரவர்களெழுதிய புதுக்கோட்டை சரித்திரத்திற்குச் "சுதேசமித்திரன்" எழுதிய மதிப்புரையில் முன்னுக்குப்பின் விரோதமாய்ப் புதுக்கோட்டை அரசர்களைத் தமிழரசர்களென்றும் பல்லவர்களென்றும் இருவிதமாய் எழுதப்பட்டிருந்தது. அதைப்படித்த பல பேர்க்கும் ஐயமுண்டாயிருக்கவாமென்பதில் ஐயமில்லை. பல்லவர்களோ ஆரிய அரசர்கள். ஸ்ரீமான் ஐயங்காரவர்களும் இவ்விஷயத்தை ஒத்துக்கொண்டு அடிக்கடி எழுதியிருக்கிறார். அவரெழுதிய பல்லவர் சரித்திரத்திலும் அப்படித்தான் எழுதியுள்ளார். ஆனால், புதுக்கோட்டை சரித்திர மதிப்புரையில் தமிழர்களையும், ஆரியர்களையும் ஒன்றுபடுத்தி யெழுதக் காரணமென்ன? அந்த ஐயங்காரவர்களின் அபிப்பிராயமா அல்லது "சுதேச மித்திரன்" சொந்த அபிப்பிராயமா என்பதை அறிய விருப்பம்.

புதுக்கோட்டையரசர்கள் கள்ளர் வகுப்பைச் சேர்ந்தவர்களென்பதற்கு அச்சமஸ்தானத்தின் பழைய சரித்திரங்களே சாட்சியாகும். ஸ்ரீமான் வெங்கடசாமி நாட்டாரவர்களெழுதிய கள்ளர் சரித்திரத்திலும் அவர் அவர்களைத் தமது மரபாகவே சொல்லியிருக்கிறார். ஆனால், கள்ளர்கள் பல்லவர்களெனவும் நாகர் மரபைச் சேர்ந்தவர்களெனவும் அப்புத்தகத்தில் அவர் போதுமான ஆதாரமின்றி எழுத ஆரம்பித்துப் பல்லவர்கள் தமிழர்களே யென்றும் தீர்முடிவுக்கு வந்திருக்கின்றார். அவரது கூற்றைத் தமிழுலகம் இன்

னும் ஒப்புக்கொள்ள முடியவில்லை. அதற்குள் அக்கூற்றுக் காரசாரியாக இம்மதிப்புரையும் ஏற்பட்டிருப்பதைக் காணச் சந்தேகமுகிக்கின்றது. அதாவது நாட்டாரவர்களின் சொந்த அபிப்பிராயப்படியோ அல்லது அவரது குலத்தவர்களின் அபிப்பிராயத்தைத் தழுவியோ அம்மதிப்புரை எழுதப்பட்டிருக்கலாமென ஊகிக்க இடந்தருகின்றது. பல்லவர்களைப் பற்றி சரித்திரமெழுதிய பலரும் அவர்கள் ஆரியர்களே என்று வந்திருக்கும் முடிவுக்கு இஃது நேர் விரோதமாகின்றது.

புதுக்கோட்டையரசர்கள் தொண்டைமான் பட்டமுடையவர்கள். அப்பட்டம் படையாட்சியர், வேளாளர் முதலியவர்க்கும் உண்டு. கள்ளர், வேளாளர் முதலியோர்க்கு அப்பட்டம் சோழ அரசர்களால் கொடுக்கப்பட்டதென்பதற்கு வேண்டிய ஆதாரமுண்டு. படையாட்சியர்களே அப்பட்டத்திற்கு பரம்பரை பாத்திய முள்ளவர்கள். தொண்டைமான் இளந்திரையன் என்பவனைப் பற்றித் தமிழுலகம் நன்குணரியும். அவன் தமிழிலக்கியங்களில் பெரும் பாணாற்றுப் படைக்குத் தலைவன். காஞ்சிபுரத்தைக் கட்டியாண்டவன். சோழர்களின் வழித்தோன்றல். அவனே ஆதி தொண்டைமான். அவனுடைய வழியில் வந்த தொண்டை மன்னர்கள் அறந்தாங்கியில் தங்கியிருந்ததாய்த் தெரிகிறது. அறந்தாங்கி அருணாசல வணங்காமுடித் தொண்டைமான் சாசனமொன்று திருச்சி டி. மு. கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டிருந்ததைச் செந்தமிழ்ப் பத்திரிகை பிரசுரித்திருந்தது. அவர்கள் படையாட்சியர் மரபினர்கள். ஆனால் தற்போது கள்ளர் மரபிற் கலந்துகொண்டதாகத் தெரிகிறது.

ஆதலால் கள்ளர்வேறு; பல்லவர்வேறு. கள்ளர்க்கும் பல்லவர்க்கும் சம்பந்தமில்லை. பல்லவர் ஆரிய நாட்டு க்ஷத்திரியர்கள், கள்ளர்கள் தமிழ்நாட்டுச் சூத்திரர்கள். கள்ளர்கள் க்ஷத்திரியர்களென்பதற்குப் போதிய ஆதாரமில்லை. அவர்கள் தமிழரசர் காலத்தில் படைச்சேவகஞ் செய்து பலவித பட்டங்களையும், பதவிகளையும் அடைந்திருக்கின்றனர். அவ்வித பதவிகளில் ஒன்றே புதுக்கோட்டை அரசு. ராமநாதபுரம் ராஜ்யமும் தமிழரசர்கள் தயவால் மறவர்கட்குக் கிடைத்ததென்றே சரித்திரம் கூறுகின்றது. கள்ளர், மறவர் அகம்படியர் ஆகிய மூன்று மரபாரும் சம்பந்தமுடையவர்களெனவும் முக்குலத்தார்களெனவும் அவர்களே சொல்லிக்கொள்வதாலும், மறவர்கள் தங்களை குகவம்சமென்றும், கண்ணப்ப நாயனார் வம்சமென்று சொல்வதாலும் அன்னோர் வேட்டுவரென்பதில் சந்தேகமில்லை. ராமநாதபுர சரித்திர மெழுதியவர்களும் அவர்களைக் கிராதவம்சமென்றே எழுதியுள்ளார்கள். அவர்களுடன் சம்பந்தமுடையவராய் முக்குலத்தில் ஓர் பிரிவினராயுள்ள கள்ளர்களும் அவ்வாறு வேட்டுவ மரபேயாகலாம். திருமங்கையாழ்வார் கள்ளர் மரபென்பதும் இக்கொள்கையை உறுதிசெய்கின்றது. கலியில் ஏற்பட்ட ஜாதிவிபரீதங்களில் இதுவும் ஒன்றெனக் கருதுகிறோம்.

புதுக்கோட்டை சரித்திரத்திற்கு மதிப்புரை எழுதிய "சுதேசமித்திரன்" ஆசிரியர் இவ்விஷயத்தை நன்றாய்க் கவனித்துப் பல்லவர்வேறு, கள்ளர்வேறு என்னும் முடிவுக்கு வரவேண்டுமாக விரும்புகிறோம்.

குறிப்பு:—ஸ்ரீமான் ஸ்ரீனிவாச அய்யங்கார் அவர்கள் கூறியதைப்போல், கள்ளரோ குறுநில மன்னரின் வம்சத்தவர்களெனக் காட்ட பலவாதாரங்களுள்ளன. அதன் உண்மையை, ஸ்ரீமான் பண்டிதர்-ந. மு. வெங்கடசாமி நாட்டார் அவர்களால் "கள்ளர் சரித்திரம்" என ஒரு நூலெழுதி நன்குவிளக்கியுள்ளாராதலின் அதுவே ஒப்பமுடிந்த முடிபாகும்.

(பத்திராதிபர்.)

———(o)———

சிலாசாஸனத் துண்டு.

(ரா. ம. சு. லக்ஷ்மண நாடார், உப்பத்தூர்.)

திருநெல்வேலி ஜில்லா, கோவில்பட்டித் தாலுக்கா எட்டயாபுரம் ஜமீனைச்சேர்ந்த செம்மப்புதூரில் அழகப்ப நாடார் மண்டபத்தின் மேற்புறத்திலுள்ள ஓர் புராதனக் கிணற்றின் பின்னுள்ள கல்வெட்டு காணப்படுகிறது.

"அனாதிசு ஆண்டு நந்தன வருஷம்.......... .....செம்மத்தூர் நல்லதம்பி நாடான்........ ....மூக்கணட....................."

குறிப்பு:—இதிற் கூறப்படுவது கொல்லமாண்டு ஆகும். இற்றைக்கும் அச் சிலாசாஸனக் குறிப்பிற்கும் இடையே 214 வருடங்கள் கழிந்திருக்கின்றன. (பத்திராதிபர்.)

கோயில் பிரவேசம்.

இராமநாதபுரம் ஜில்லாவிலுள்ள ஓர் கோயிலில் நாடார்கள் போகக்கூடாதென்று கவர்ன்மெண்டு உத்திரவு பிறந்திருந்ததாகவும், அதை மீறி நாடார் போனதாகவும், அதனால் அவர்களுக்கு அபராதமும், தண்டனையும் ஏற்பட்டதாகவும், அதேவிதமான இரண்டொரு கோயில்களில் நாடார்கள் பிரவேசமில்லாமையால் தாழ்ந்த சாதியாரென்றும், தம்மனதில் நினைத்துக்கொண்டு, அவற்றை யொரு பிரமாதமாக ஓர் அற்பன் எழுதி சந்தோஷித்தான். இஃது உலக அநுபவமில்லாத அறிவீனமே யாகும். ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் பிறப்புரிமையை அடைய ஆவல் கொள்ளும் இக்காலத்தில் போகக்கூடாதென்ற கோயிலில் போனதும், அதனால் அபராதம் தண்டனை பெற்றதும் ஒரு இகழ்ச்சி யாகுமா? காந்தியடிகளும் அவரைப் பின்பற்றிய தொண்டர்களும் பல தரம் தண்டனை யடைந்தது எதற்காக? தம் நாடு இழந்திருக்கும் சுதந்தர வுரிமையை அடைவதற்கல்லவா? இவ்விந்தியநாடு இந்துக்களால் ஆளப்பட்டதென்பது வெள்ளிடை மலையாம். அவர்களும் இந்துக்களாதலால், அச்சுதந்தரத்தை யடையவேண்டுமென்பது அவர்கள் கொள்கையாம். அப்படி அவர்கள் அக்கொள்கையைக் கொண்டு தண்டனை யடைந்திருப்பதால், அச்செய்கை அவர்களுக்கு உயர்வைத் தந்ததா? இழிவைத் தந்ததா? மூடனல்லவா இழிவெனக் கூறுவான்.

அதைப்போல் நாடார்களும் இச்சென்னை இராஜதானியிலுள்ள 23-ஜில்லாக்களில் இராமநாதபுரம், திருநெல்வேலி, மதுரையின் ஓர் பாகமாகிய இரண்டரை ஜில்லாக்களில் சில குறிப்பிட்ட கோயிலில் பிரவேசமில்லாமையால் அப்பிரவேசத்தை யடைவான் வேண்டி என் முயற்சி செய்யப்படாது? அதனால் வரும் தண்டனையை ஏற்றுக்கொண்டதால் இழிந்த சாதியாகி விடுமா? மடையர்களல்லவா அச்செய்கையை இழிவெனக் கூறுவர். அந்த இரண்டரை ஜில்லா தவிர, மற்ற இந்தியா முழுமையும் கோயில் பிரவேசஞ் செய்யவும், உச்சவாதிகளை நடத்தவுமிருக்க, இந்த இரண்டரை ஜில்லாவுக்கு வந்த கெடுதி என்ன? ஒரு சில மூடர் அவ்விரண்டரை ஜில்லாவிலுள்ள கோயில்கள் ஆகமவிதிப்படி ஏற்படுத்தப்பட்ட கோயில்களெனக் கூறுவர். அப்படி ஆகமவிதிப்படி ஏற்படுத்தப்பட்ட கோயில்களாக விருப்பின், அவ்வாகமத்தில் சான்றோர் அல்லது சாணார்களாவது, நாடார்களாவது வரப்படாதெனக் கூறப்பட்டுள்ளதா? அத்தகைய பிரஸ்தாபத்தைக் காட்டி வெளிப்பட அவ்வற்பரால் முடியுமா? ஒவ்வொரு ஆகமத்திலும் இன்னின்னசாதியார் கெர்ப்பக்கிருகத்தில் செல்லுபவர் எனவும், இன்னின்ன சாதியார் அந்தராளத்தில் செல்லுபவர் எனவும், இன்னின்னசாதியார் மகாமண்டபத்தில் செல்லுபவர் எனவும், இன்னின்ன சாதியார் கோயில்புறம்பில நிற்பவர் எனவும் வரையறுக்கப்பட்டுள்ளது. அவ்வாறு வரையறுத்திருப்பதில் நாடார், சான்றோர் என்னும் சாதிப்பெயர்கள் காணப்பட்டுள்ளதா? இல்லையே! ஆனால் அப்பெயர்கள் சௌண்டிகரைக் குறிக்குமென்பர். அப்படிக் குறிக்குமென நூற்சாட்சியைக் காட்ட முடியாது. குறும்பரும் வேடரும் ஏக குலத்தவர் எனக் கூறி பாரத ராமாயணமும் பெரிய புராணம் திருவிளையாடலும், சங்கநூற்களும் முன்னிற்றலைப்போல், சான்றோர் என்னும் பெயர் தாழ்ந்த பொருளைத் தரக்கூடியது என்றாவது, அல்லது சௌண்டிக சப்தத்தை விளக்கக்கூடியது என்றாவது அந்நூற்களிலேயே கூறியிருக்கிறதெனக் காட்ட முடியுமா? ஒருக்காலு முடியாது. ஆனால் எந்த கோத்திரத்தார் நாமம்போடும் இரண்டொரு கவிராயர்களும், இரண்டொரு டிஸ்டிரிக்ட் மானுயல்களிலும் தாழ்வாகக் கூறியிருப்பதாகக் கூறி முடிப்பர். அவர்கள் கூறிய முடிபுக்காவது முன்னூலாதாரங் காட்டியுள்ளார்களா? தூஷிக்க வந்தவர்கள் நூலுக்கெங்கு போவார்கள்? அதைப்போல் அர்த்தனரீசப்

பிள்ளையும் அவதிப்படுகிறார். பிராமணரை தூஷிக்க முற்படுபவர் நூலைச்சாட்டாது. பிராமணர், பாராமணர், பறையர் என்றாகுமெனக் கூறுவதைப்போல், சான்றார் சௌண்டிகாராகுமெனக் கூறுவர். பிராமணர் என்பதை பறையர் என நேர்பொருளைக் குறிக்குமெனக் காட்ட அவர்களுக்கு மூளையில்லை. அதைப்போல் சான்றாரின் பொருள் சௌண்டிகரில் உண்டெனக் காட்ட மூளையில்லை. இவ்விதமாகவே ஒன்றை மற்றொன்றாக்கி பொருள்கொள்ள முடியுமேயன்றி, நேர்பொருளைக் காட்ட ஒருவராலும் முடியாது. ஆகவே சௌண்டிகர் வேறு சாதியார், சான்றார் வேறுசாதியார் எனவறிவர்.

சௌண்டிகரும் தாழ்குலத்தவரல்லர். சௌண்டிகரைச்சுட்டி, சைவபுராணம், 71-வது அத்தியாயம், 8-வது சுலோகத்தில் அநுலோமராகக் கூறப்பட்டுள்ளது. அதாவது க்ஷத்திரிய பெண்ணுக்கும், சூத்திரனுக்கும் பிறந்தவராகக் கொள்ளப்பட்டிருக்கிறது. இந்த அநுலோமச் சௌண்டிகரை, சைவபுராணம், 71-வது அத்தியாயம், 11-வது சுலோகத்திலும்; மநுஸ்மிருதி, 10-வது அத்தியாயம், 13-வது சுலோகத்திலும் ஊரின் உட்குடியென்றுங் கூறப்பட்டிருக்கின்றது. அதுமாத்திரமல்ல. அவர்கள் வீட்டில் நடத்தும் சிரார்த்தத்தில் பார்ப்பாருக்கு அன்னசிரார்த்தம் செய்வதாகக் கூறப்பட்டுள்ளது. சிரார்த்தம் என்பது ஒவ்வொரு வருடமும் இறந்தவர்களுக்குச் செய்யுமோர் கிரியை. அக்கிரியையை சிலசாதியார் தங்கலாக மற்றையோர் பார்ப்பாரைக்கொண்டு நடத்துதல் உலகவழக்கு. சிரார்த்தமும் அன்னசிரார்த்தம், ஆமசிரார்த்தம் என இருவகைத்து. அன்னசிரார்த்தம் என்றால் பார்ப்பாருக்கு போஜனஞ் செய்து படைப்பது. அதாவது போஜனம் உண்ணச்செய்வது. ஆமசிரார்த்தம் என்றால் பார்ப்பாருக்கு அரிசி, காய், கிரை வகைகளைக் கொடுப்பது. இவ்விருவகையில் சௌண்டிகர் பார்ப்பாருக்கு அன்னசிரார்த்தம் அளிக்கின்றனர்.

"Sondi:—TheSondis or Sundis are summed up in the Madras Census Report, 1901, as Oriya toddy selling caste. „ „ „ „ „ The dead are burned, and death pollution lasts for ten days. Daily, during this period cooked food is strewed on the way leading to the burning-ground. On the eleventh day, those under pollution bathe and the sacred fire [homam] is raised by a Brahman. As at a wedding, twelve Brahmans receive food and money." vide

Edgar Thurston's Castes and Tribes of Southern India Vol. vl, p. 394-397.

"சௌண்டிகர் ஒரியாதேசத்திலுள்ள கள் விற்போரென, 1901-ம் வருஷத்தில் எடுத்த குடிமதிப்புக் கணக்கில் விளங்குகின்றனர். „ „ „ „ அவர்களில் இறந்தவர்களைக் கொளுத்தப்படுகிறது. இறந்ததீட்டு அவர்களுக்குள் பத்துநாள் அநுஷ்டிக்கப்படுகிறது. இந்த பத்துநாளில் தினதினமும் வீட்டிலிருந்து கொளுத்தின இடத்திற்கு போகும் வழி நெடுக சோற்றைத் தூவிக்கொண்டு போவார்கள். பதினோராம்நாள் தீட்டுக்குரியவர்கள் ஸ்நானஞ்செய்து பார்ப்பாரால் ஓமம் வளர்த்துவார்கள். அவர்கள் கலியாணத்தில் நடப்பதைப்போல் பனிரெண்டு பார்ப்பார்கள் அவர்கள் வீட்டில் போஜனஞ்செய்து, தட்சணையும் பெற்றுக்கொள்ளுவார்கள்." என தர்ஸ்டன் துரை கூறியிருக்கின்றார். இப்பகுதியால் சௌண்டிகர் வீட்டில் பார்ப்பார் புசிப்பர் என விளங்குகின்றது. சௌண்டிகளை தாழ்ந்தசாதி, தாழ்ந்த சாதி என ஓலமிடும் பள்ளிப்புலவராகிய அர்ச்சகரீசப் பிள்ளையின் சாதியார் வீட்டில் பார்ப்பார் புசிப்பாரா? இவ்வாறு யோக்கியதையுடைய இவர்கள் சௌண்டிகரைப்போய் தாழ்ந்தசாதியெனக் கூறுதல் அறியாமையேயாம். ஆகவே சௌண்டிகர் ஊரின் உட்குடியெனவும், கோயிலுக்குப் போகக்கூடியவர்களெனவும், அவர்கள் வீட்டில் பார்ப்பார் சமுத்துவபோஜனம் புசிப்பர் எனவும், இவைகளால் சௌண்டிகர் தாழ்ந்தசாதியாராகாரெனவுமறிவர்.

எங்கள் சாதியாருக்குக் கோயில் பிரவேசம் இல்லாமைக்குக் காரணம் அஃதன்று. மற்றொரு காரணமுமன்று. இற்றைக்கு (1623-1559)

இருநூற்றைம்பது வருடங்களுக்குமுன் மதுரையை அரசாண்ட திருமலை நாய்க்கர் காலத்தில் பாண்டிய வம்சத்திலுதித்த நாடார்களுக்கும், திருமலை நாய்க்கருக்கும் மதுரை மீனாட்சியம்மன் கோயில் மேலே கோபுரவாயில்படி விஷயமாக சில தகரார் நேர்ந்தது. அதாவது கோயில்களின் மேலைவாயல் வழி அரசர்கள் செல்லுதற்குரிய வழியென்பது சாஸ்திர சம்மதி. அவ்வழியாக, பாண்டிய அரசவம்சத்திலுதித்த நாடார்கள் பரம்பரையாக அரசிழந்த பிறகும் சென்றுவந்தனர். அவ் வாதிக்கத்தை அதிகாரிகளால் பொறுமைகொண்டு தடுக்க நேர்ந்தமையால், அதுசம்பந்தமாக பாண்டிய நாட்டில் ஒரு பெருங் குழப்பம் ஏற்பட்டது. (இதற்கு அத்தாட்சியாக சென்றவருடம் மதுரை மீனாட்சியம்மன் கோயிலின் கும்பாபிஷேகத்தை முன்னிட்டு மேலைவாயில் வழியை திறந்த காலத்தில் ஏற்பட்ட குழப்பத்தையும் இங்கு கவனிக்கலாம்.) அக்காலத்தில் ஏற்பட்ட குழப்பத்தை யடக்க திருமலை நாய்க்கர் எழுபத்திரண்டு பாளையப்பட்டை ஏற்படுத்திய போது, தம்மரசுக்குட்பட்ட பாண்டிய நாட்டின் கோயில்களின் மேலைவாயல்களெல்லாம் அடைக்கும்படி யாகவும் உத்தரவிட்டனன். அவ்வுத்தரவை யனுசரித்து அந் நாடார்கள் வசிக்கும் பாண்டிய நாட்டிலுள்ள எல்லாக் கோயில்களின் மேலைவாயல்களும் அடைக்கப்பட்டன. அப்படி அடைக்கப்பட்டிருந்ததை நாளதும் கண்கூடாகக் காணலாம். அப்படி யடைத்தமையால் இந்நாடார்களும் வைராக்கியங்கொண்டு போகாமலிருக்கவும் நேர்ந்தது.

இம்முறையே நாடார்கள் கோவிலில் பிரவேசியாம லிருத்தற்குக் காரணமேயன்றி, வேறன்று. கள்ளிலேனுமொன்று ஆகமவிதியால் தடுக்கப்பட்டவரல்லர். திருமலைநாய்க்கர் காலத்திற்கும், கமுதிசேசுக்கும் மத்தியகாலத்தில் அப் பாண்டியநாட்டிலுள்ள பல முக்கிய கோயில்களில் உச்சவமும், மண்டகப்படியும், மண்டபமுதலிய கட்டடங்களும் நாடார்கள் செய்து வந்தனர்கள். அஃது வருமாறு:—

1. திருச்செந்தூர் சிவன்கோவிலுக்குள் இருக்கும் மண்டபம், முற்காலத்தில் திருச்செந்தூர் தாலூகா, காயாமொழி-சிவந்த ஆதித்தநாடார் என்பவரால் கட்டிவைக்கப்பட்டது தவிர, ஷை கோவில் சிவக்கொழுந்தீஸ்வரர் சந்நிதி ஆயிரக்கால் பந்தல் மண்டபமும், அதைச் சேர்ந்த தண்ணீர்ப்பந்தல் மண்டபமும், நந்தவனமும் ஷை சிவந்தி ஆதித்த நாடாராலும், குமாரசுவாமி ஆதித்த நாடார் என்பவராலும் கட்டப்பட்டன. அவைகளின் குறைவேலையை நாளதுக்கு சுமார் 100-வருஷங்களுக்கு முன் ராமலிங்க ஆதித்தநாடார் என்பவர் கட்டி முடித்தார். துவக்கமுதலே இந்தமண்டபங்கள் ஷை ஆதித்தநாடார்களின் ஆதீனத்திலிருந்துவந்தன. ஆவணி மாசிமாத உற்சவங்களில் ஷை பந்தல் மண்டபத்துக்குள் ஷை ஈஸ்வரர் வரும்போது நடக்கும் நைவேத்தியச் செலவு ஆதித்தநாடார்களால் நடத்தப்படும். ஷை மண்டபத்து முகப்பிலிருக்கும் 6-ம் திருநாள் சாட்டையடி மண்டபப்படியும் ஷை ஆதித்தநாடார்களுடையது. இதுபோக திருச்செந்தூர் கோவிலுக்கு (ரதம்) தேர் செய்து வைத்ததும் ஆதித்த நாடார்களாம். இது விஷயமாய் 'திருச்செந்தூர்கோவில பிரபந்தம்' என்னும் பழய நூலில், "அட்டதிசை புகழ் ஆதித்தநாடார் கொட்டகை தேரையும் பாராய்" என பாட்டு வருகிறது. ஆவணி மாசி மாதங்களில் ரத உற்சவம் நடக்கும்போது, ஷை ஆதித்தநாடார்களை ஷை கோவில் ஸ்தானீகர்கள், நம்பிகள் முன்பின்வர, மேளதாளங்களோடு மிக்க மரியாதையாய் ஷை தேருக்குச் சமீபமாக அழைத்துவர, அவர்கள் முன்னுபத்தமாய் பலி-விடலை எறிதல் முதலிய கிரியைகளை நடத்திக்கொண்டு, ஷை தேர்வடத்தைத் தொட்டுக் கொடுத்த பின்பே இதரகுலத்தவர்கள் தேரை இழுப்பதுண்டு. இந்த வழக்கம் ஞாபகத்துக் கெட்டாக் கால முதல் நடந்துவருகிறது. ஷை தேர் அலங்காரச் செலவையும் இந்த ஆதித்த நாடார்களே கொடுத்துவருகிறார்கள். இதுவிஷயமாய் "ஆர் வந்தால் தேரோடும்? ஆதித்தநாடான் வந்தால்

"தேரோடும்" என அவ்வட்டகையில் யாவருமறிந்த பழமொழியிருந்துவருகிறது.--மேலும் பிரதிதினமும் சுப்பிரமணியர் ஆலயத்தில் நடக்கும் 'அறுபத்துமூவர்' அர்ச்சனைச்செலவு ஷை ஆதித்தநாடார்களால் நடந்துவருகிறது.--விசாககாலத்தில் ஊரடங்க பிராமண போஜனம் ஆதித்தநாடார்களால் கொடுக்கப்பட்டு வருகிறது.—ஐப்பசி மாதத்தில் சுப்பிரமணிய சுவாமி திருக்கல்யாண உத்சவம்நடக்கும்போது மங்கலியில் மாப்பிள்ளைவீட்டுச் செலவாக கல்யாணவிருந்தும், ஊரடங்க பிராமண போஜனமும் ஆதித்தநாடார்களால் நடக்கும்; மறுநாள் பெண்வீட்டுவகையாய் நடக்கும் விருந்தும், ஊரடங்க பிராமணபோஜனமும், வள்ளியம்மை திருப்பூல மண்டபப்படியும் நட்டாத்தி ஜமீன்தாரான 'திருவழுதிநாடார்' செலவில் நடக்கும். ஆவணி மாசி மாத திருநாட்களில் திருவாங்கூர் மஹாராஜாவால் நடத்தப்படும் உத்சவத்தின் இரண்டாம் 'சேவை.' மேற்கண்ட ஆதித்த நாடார்களால் நடத்தப்படும். ஷை தேவஸ்தான விஷயமாகவும் தேர் விஷயமாகவும் ஆதித்தநாடார்கள் முற்காலத்தில் மிகுதியான மானியங்கள் விட்டுக்கொடுத்திருப்பதில், சிலவற்றுக்கு அவர்களே நாளது வரை ஹக்தார்களாகவும் இருந்து வருகிறார்கள்; அப்படியே, ஷை சுப்பிரமணிய கோவிலின் "அட்டவிசேஷம் மாஸ்தவிசேஷம், ஆற்று திருமஞ்சனம்" இவைகளுக்காகவும் திருச்செந்தூரிலுள்ள நந்தவன பரிபாலனம், மடத்து திருவிளக்கு இவைகளுக்காகவும், நட்டாத்தி திருவழுதிநாடார் குடும்பத்தார் விட்டுக்கொடுத்த மானியச் சொத்துக்கள் சிலவற்றின் ஹக்தார்வேலை, ஷை திருவழுதிநாடார் குடும்பத்தினிடத்து வருகிறது. கார்த்திகைதீப உற்சவத்தில் திருச்செந்தூரில் நடக்கும் 'சொக்கப்பனை'யும் அதைச்சேர்ந்த செலவும் ஆதித்த நாடார்களால் நடத்தப்பட்டு வருகிறது. வெயிலுகந்த அம்மன், 8-ம் திருநாள் மண்டபப்படி செலவு பூராவும் ஆதித்தநாடார்களால் நடந்துவருவது மல்லாமல், தெற்குரதவீதியிலிருக்கும் மண்டபமும் அதைச்சேர்ந்த நந்தவனமும் ஆதித்தநாடார்களின் ஆதினத்திலேயேயிருந்துவருகின்றன. ஷை மண்டபச்செலவுக்காகவும், அதிலிருக்கும் (கணபதி) பிள்ளையார் பூஜைக்காகவும், முன்னமே ஷை நாடார்கள் போர்ந்த மானியமும் விட்டுக் கொடுத்திருக்கிறார்கள். பிரதிமாதத்தின் கடைசி சுக்கிரவாரத்தில் சுப்பிரமணியர் கோவிலில் நடக்கும் நைவேத்திய அலங்கார எழுந்திருந்தல செலவு பூராவும். நாஞ்சினாட்டைச் சேர்ந்த ராஜாக்கள்மங்கலம், பத்மநாபநாடார் குடும்பத்தவரால் பாரம்பரையாய் நடந்துவருகிறது. பிரதிதினமும் ஷை கோவிலில் நடக்கும் 'உதயமார்த்தாண்டபூஜைக்' குரிய புஷ்பச்செலவு குட்டம் குமாரவீரமார்த்தாண்ட நாடார்குடும்பத்தவரால் நடந்துவருகிறது. ஷை கோவில் கோபுரத்தின் மேல்வாசலிலிருக்கும் அம்மனுக்கு பிரதிதினமும் நடக்கும் பூஜை செலவு மேலப்புளி, சிவசுப்பிரமணிய நாடார் குடும்பத்தவரால் நடந்துவருகிறது. இப்படியே இன்னும் பல வுண்டு.

2. ஸ்ரீவைகுண்டம் தாலூகா பெருங்குளத்தில், நட்டாத்தி ஜமீன்தாராகிய திருவழுதிநாடார் வம்சத்தவரின் குலதேவதையாகக் கொண்டாடப் படுகிற திருவழுதி ஈஸ்வரர் கோவிலுக்கு, ஷை திருவழுதிநாடார் குடும்பத்தவரால் அநேக மானியங்கள் விடப்பட்டு, அநேக கைங்கரியங்கள் அவர்களால் பண்டைகாலமுதல நடந்துவந்திருக்கின்றன. நாளதும் ஷை கோவிலில் பங்குனிமாதம் நடக்கும் உற்சவ சந்தர்ப்பத்தில், ஷை திருவழுதிநாடார் குடும்பத் தலைவருக்கு ஷை கோவில் ஸ்தானிகர் பட்டுக்கட்டி, அநேக மரியாதைகள் செய்விப்பதுந் தவிர, ஷை குடும்பத்தவரால் ஒரு மண்டபப்படியும் நடந்துவருகிறது. அது போக, கார்த்திகைதீப தினத்தில் பெருங்குளத்தில் நடக்கும் 'சொக்கப்பனை'யும் அதைச்சேர்ந்தமான செலவுகளும் ஷை திருவழுதிநாடார் குடும்பத்தவராலேயே பாரம்பரையாய் நடந்துவருகின்றன.

3. மதுரைக்கு அடுத்த தென்புறமான திருப்பரங்குன்றத்திலிருக்கும் சுப்பிரமணியர்

கோவிலின் மஹாமண்டபம், ஆஸ்தானமண்டபம் முதலிய எல்லா மண்டபங்களும், உத்தர மாறநாடார்களால் சில நூறுவருடங்களுக்கு முன்னமே சுமார் 10-லக்ஷரூபாய் செலவில் மிக அலங்காரமாய் கட்டி வைக்கப்பட்டிருப்பதுமல்லாமல், அதின் ரிப்பேர் தளவரிசை, முன்னலங்காரம் முதலியவைகளெல்லாம், நாளதுக்கு 30-வருஷங்களுக்கு முன், சுமார் 1-லக்ஷரூபாய் செலவில் அவர்களாலேயே செய்து வைக்கப்பட்டன. அதுபோக, ஸ்ரீ கோவிலின் பங்குனி உற்சவத் தேரும், உத்தேசம் 100-வருஷங்களுக்கு முன் சுமார் 1-லக்ஷரூபாய் செலவில் ஸ்ரீ நாடார்களால் செய்து வைக்கப்பட்டது. மேலும் ஸ்ரீ கோவிலில் நித்யம் சுப்பிரமணியருக்கு நடக்கும் 'அர்த்தசாமக்கட்டளை' பரம்பரையாய் ஸ்ரீ நாடார்களின் செலவில் நடந்துவருகிறது மல்லாமல், நித்திய அர்ச்சனைக்கு வேண்டிய புஷ்பத்துக்கான நந்தவனங்களும், பாலுக்கான பசுக்களும் அவர்கள் செலவிலேயே பரிபாலித்துக் கொடுக்கப்பட்டு வருகின்றன. இதுவன்றி, ஸ்ரீ கோவிலின் ஆஸ்தான மண்டபத்திலிருக்கிற 'திருவாட்சி'க்குரிய நித்திய தீபார்ச்சனை, மாதாந்தரமும் மற்றும் உற்சவ காலங்களிலும் சுப்பிரமணியர் கோவிலைச் சுற்றிவரு போது நடக்கும் 'நட்டி திருக்கண்' தீபார்ச்சனை, இவைகளின் செலவுகளும் ஸ்ரீ நாடார்களால் நடந்துவருகிறது மல்லாமல், ஐப்பசிமாதம் நடக்கும் 'கந்தர் சஷ்டி' உற்சவத்தில் ஒரு மண்டபப்படியும் நாடார்களால் நடத்தப்படுகிறது. ஸ்ரீ கோவில் விசேஷங்களின்போது திருப்பரங்குன்றம்போகும் நாடார்களின் வசதிக்காக அங்கே அநேக மண்டபங்கள்: மடங்கள் முதலானவைகளை நாடார்கள் உண்டுபண்ணி பரிபாலித்து வருகின்றனர்.

4. மதுரை மீனாக்ஷி சுந்தரேஸ்வரர் கோவில் நித்தியம் ஸ்ரீ ஈஸ்வரருக்கு (காலை) சந்தி, இரண்டாம்கால நைவேத்தியம் இவைகள் நடக்கும்போது சொக்கலிங்கத்துக்கு அணியும் 'இண்டை' என்னும் கொண்டைமாலை, பரம்பரையாய் உத்தர மாறநாடார்களின் செலவில் நடந்துவருகிறது. இதுபோக, ஆவணிமாத உற்சவத்தில், பழய சொக்கநாதர் கோவில் முன்பாக பிட்டுத் திருவிழாயாகம்நடத்த சுந்தரேஸ்வரர் செல்லும்போது, ஸ்ரீ நாடார்களால் ஒரு மண்டபப்படியும் நடந்துவருகிறது.

5. பழனி 'தண்டாயுதபாணி என்னும் சுப்பிரமணியர் கோவில், சுமார் 1,000 வருஷங்களுக்கு முன், நாடார்களால் தங்கத்தால் செய்துவைக்கப்பட்ட குதிரைவாகனம், இப்போ சிலவருஷங்களுக்கு முன் ஸ்ரீ உத்தர மாறநாடார்களால் இன்னும் மிகுதியான பொருள் செலவு செய்து புதுபித்து வைக்கப்பட்டிருக்கிறது. ஸ்ரீ கோவிலின் முன்பாக இருக்கும் ஆஸ்தான மண்டபமும் ஸ்ரீ நாடார்களால் சுமார் 1-லக்ஷரூபாய் செலவுசெய்து கட்டிவைக்கப் பட்டது தான். இக்கோவிலின் புரட்டாசிமாதத்து உற்சவத்தில் ஸ்ரீ நாடார்களால் ஒரு மண்டபப்படி நடந்துவருகிறது.

இத்யாதி சம்பவங்களை நோக்க நாடார்கள் கள்விலைஞரென ஆகமவிதியால் தடுக்கப்பட்டவர்களெனக் கூறும் போலிகளின் வாக்கு எங்ஙனே கனம்பெறும்? அவ்விதமிருப்பின் அவர்கள் உச்சவாதி கட்டடங்கள் செய்ய இடங்கொடுக்குமா? எல்லாம் கமுதிகேஸுக்குப் பிறகே கடினமாக கோயில் பிரவேசத்தைத் தடுக்க ஏற்பட்டனர்.

அக்கோயில் பிரவேசக் கலகக்காலத்தில் சிலர் அறியாமையாலும், சிலர் பொறாமையாலும் உண்மைக்குமாறாக எழுதியிருக்கலாம். அவைகளை முன்னிட்டு எங்கள்சாதி தாழ்ந்துவிடமாட்டாது. ஒவ்வொரு சாதிக்கும் அவரவர்களது சாதிப்பெயர்களின் தன்மைகளை நோக்கியே உயர்வு தாழ்வு ஏற்படவேண்டும். அவ்விதந்தாழ்வு எங்கள் சாதிப்பெயரில் காட்ட முடியுமா? அல்லது விதவாவிவாகம் முதலிய தாழ்ந்த நடபடிக்கைகளாவது உண்டா? அத்தகைய நடபடிக்கைகள் எங்கள் சாதியில் இல்லாமலிருக்க, நாங்கள் தாழ்ந்த சாதியாவது எவ்விதம்?

"The Chantrar Caste among whom a heathen, the marriage of widows is not allowed." சான்றோர் சாதியில் விதவாவிவாகம் கிடையவே கிடையாது" என (Rev. R. R. Meadows) மெடோஸ் என்னும் மிஷினரி துரை, 1868-ம் வருஷத்திலும்; (Bishop Caldwell) பிஷப் கால்டுவெல் துரையும்; (A. F. Cox. M. C. S.) காக்ஸ் துரையும்; (Sir. H.A. Stuart.I.C.S) ஸ்டேவார்ட்பிரபுவும்; (A.J.Stuart. M. C. S.) ஸ்டீவர்ட் துரையும்; கனம். வி. பி. சுப்பிரமணிய முதலியாரும்; கனம். திவான் பஹதூர். வி. நாகமய்யாவர்களும் (Rev. S. Winfred) வின்பிரட் ஐயரும், இன்னும் தென் இந்திய சாதிகளின் அநுபவ ரிகார்டுகளை விளக்கவந்த Thurston தர்ஸ்டன் துரையும். சாட்சி பகர்ந்திருக்கின்றார்கள். இவ்விதம் விதவா விவாகமே கிடையாதெனக் கூறியிருக்க, மற்ற வைகளெவ்விதம் எங்குலத்தார் நிகழும்? இதை விட்டு கமுதிகேஸ், சிவகாசி கலகம் எனக் கூறுவதால் பயனென்னை? மகமதியர் துஜஸ்தம்பம் வரைக்கும் போகலாமாம், நாடார்கள் போகப்படாதாம். இதுதான் ஆகம விதியோ! இவ்வளவும் பொறுமையே காரணம். சாதாரணமாக கமுதி கேஸுக்கு முன் கோயில்களில் நடந்துவந்த நாடார்களுக்குரிய அக்கு சுதந்தரத்தை ஏன் மறுபடியும் அடைய முயற்சி செய்யப்படாது? அப்படி செய்வதால் ஏற்படும் தண்டனை அபராதம் முதலியவைகளுக்கு ஏன் உட்படப்படாது? அது எவ்விதம் இழிவைத்தரும்? அறிவிலிகளல்லவா அதையொரு பொருட்படுத்தி "இழிவு இழிவு" எனக் கூறிய அவதிப்படுவர். எல்லாம் அறிவின்மையே காரணம்.,

"Admission into temples, I see, is based more on custom than anything else and varies with each or groups of districts in Southern India. Maravars have no admission in the temples at Cape Comorin, janarthanam, Trivandrum and other places. Nadars are never refused admission in temples in the Tanjore District. The late Mr. Ponnusami Nadar, a distinguished gentlemen of your community, was a member of the Kumbakonam Devastanam Committee and was my colleague in that body." Nadar Mahajana Sangam, Eighth Conference held at Sivakasi. Presidential Address by The Rajah of Ramnad. 27th june 1922.

"மறவர்களை கன்னியாகுமரி கோவிலிலும், ஜனார்த்தனம், திருவாந்தரம் கோவில்களிலும் போக விடுகிறதில்லை" என கனம் இராமநாதபுரம், ராஜா அவர்கள் சிவகாசியில் நடந்த "நாடார் மகாஜன சங்கம், 9-வது கான்பரன்ஸில் தலைமைவகித்து கூறியிருக்கின்றார். அவர்கள் என்ன கள்விலைஞர்களா?

திருவாங்கூர், மலையாளக்கோயில்களில் பிராமணர், நம்பூத்திரி, நாயர் அன்றி மற்ற வைசியர், வேளாளர் முதலியவர்களை செல்ல விடுகிறதில்லை. அதனால் வைசியர் வேளாளர்கள் தாழ்ந்த சாதியாராகி விடுவார்களா? அவர்கள் எந்த ஆகமத்தால் தடுக்கப்பட்டார்கள்? ஏதோ ஒருவித கலகத்தால் தடுக்கப்பட்டிருக்கலாம். அதைப்போல் நாடார்களையும் தடுக்கப்பட்டதென வறிவர்.

(பத்திராதிபர்.)

உபசாரம்.

சிவகாசி முனிஸிபாலிடிக்கு முதலாவது எலக்ஷன் சேர்மனாக தேர்ந்தெடுக்கப் பெற்ற சென்னை சர்வகலாசாலை செனட் மெம்பரும், சிவகாசி ஹிந்து நாடார் விக்டோரியா ஹைஸ்கூல் பிரசிடென்டும், நமதுகுலத் தலைவருமான சிவகாசி ஸ்ரீமான் முதலாளி பா. செ. குருசாமி நாடார் அவர்களுக்கு, சிவகாசி ஹிந்து நாடார் விக்டோரியா ஹைஸ்கூல் பழைய மாணவ சங்கத்தாரால் 13-12-24-ல் மனனந்தமாக ஓர் திவ்ய வந்தனோபசாரப் பத்திரம் அளிக்கப்பட்டது

புண்டரதாரணம்.

(பிரம்மவித்தியா.)

(முன்தொடர்ச்சி.)

ஐயா! இப்பொழுது நீராட்டமானவுடன் திருநீறணிதலின் பயனெடுத்தோதல் அத்தியாவசியம். இவ்விஷயம் திருநீற்றிற்கும் திருமண்காப்புக்கும் சமமாயினும் ஓரிடம் சொன்னால் மற்றோரிடம் அதைப்பற்றி எழுதவேண்டியதில்லை என்பதே எமது கருத்து.

இங்கு "காலையில் முழ்கி நல்லுடை உடுத்து உடனே புண்டரம் தரிக்க" என்பது விதி. அதை திருத்தமாய்த் தரிக்கவேண்டிய விடம் முதலியவை நன்கு விளக்கப்படுகின்றன. இங்கு விசாரிக்க வேண்டியது. விடியற்காலத்தில் நேத்திரம் முதலியவிடங்களில் மலம் இளகி நிற்பதைப்பற்றி முன் எடுத்துக்காட்டினோம். அதுகொண்டு அக்காலத்தில் ஸ்நானாதிகள் செய்வதால் உடனே சரீரத்தில் எங்கும் ஓர் விதக் குளிர்ச்சியுண்டாவதால் புத்தி ஸ்தானமாகிய மூளை முதலிய விடங்களும் குளிர்ச்சியடைந்து அவற்றின் வேலை சிறிது தாமதமாகவே நடக்கநேரும். இனி மூளை முதலிய விடங்களிலும் சந்துக்களிலும் சிறிது சூடுண்டானால் புத்திப் பிரகாசமும் சந்திகளில் கபம் உருகினால் சந்திகளுக்கு மிக சுலபமாய் வேலைசெய்யுமாற்றலும் உண்டாம். ஆதலின் மூளை முதலிய நான்கு புத்தி ஸ்தானங்களிலும் அதைப்போன்ற சில சந்திகளிலும் அவசியம் இத்திருநீறு தரிக்கவேண்டும். இனி எக்காலத்தும் சந்திகளால் சௌகரியமும் வேண்டுமாதலால் எக்கருமத்தார்க்கும் புண்டரந்தரித்தல் அவசியமே ஆயினும் நீராட்டத்தில் உச்சி முதல் உள்ளங்கால் வரையில் ஒரே நிமிஷத்தில் குளிர்ச்சி பிறப்பதாலும் உடனே புத்திஸ்தானத்திலும் சந்திகளிலும் உஷ்ணம் பிறப்பிக்கவேண்டிநேருதலாலும் அதற்கென உடனே இத்திருநீற்றை முற்கூறிய விடங்களில் தரிக்கவேண்டும். இனி திருநீறு உடலிலுள்ள நீரை இயக்கும் என்பது வைத்தியத்திலும் அனுபவத்திலும் கண்டதுணிபு. பஸ்மம் தண்ணீரை யியக்கக் கதிரவன் கதிர்த்துணையைச் சிறிதும் அவாவாது. பண்முதலியவை தண்ணீரை இயக்கக் கதிரவன் கிரணவாற்றலை எதிர்நோக்கும்.

உதாரணமாக, ஒரு சிறுச் சாம்பற்கட்டியை கையிலெடுத்து இருண்டவிடத்திலிருந்து தண்ணீரில் சிறிது நனைத்தால் அது உடனே தன்னுருவம் உள்ளமட்டில் தண்ணீரை இயக்கக் காண்கின்றோம். வைத்தியத்திலும் ஒருவனுக்கு தலையில் நீர்க்கோர்வை யிருந்தால் அவனுக்கு ஒரு சாம்பல் மூட்டையைத் தலையணையாக விடின் அது அந்த நீரை இயக்கும் என்று சொல்லியிருக்கிறது. இதுமட்டோ! சிறிது தண்ணீர் பட்டவுடன் அந்தச் சாம்பற் கட்டியில் வெளிவரும் மணம் பித்தத்தைச் சாந்தப்படுத்தும். எங்ஙனமெனில், காலை நீராட்டத்தால் தாதுவிருத்தியும் பித்தம் ஓங்குதலும் உண்டென்றுரைத்தோமல்லவா? அப்பித்தம் தினந்தோறும் மேனோக்க வாந்திரோகம் பிறக்கும். அதற்குத் தண்ணீர் சேர்ந்த திருநீற்றின் நாற்றம் பெரிய மருந்தாகும். அதுகொண்டே காலையில் உடலில் தண்ணீர் கலந்த திருநீற்றைப் பூசுவது. விடியற்காலச் சூரியகிரண குணத்தையும் அதிலுள்ள பித்தத்தையும் பற்றிப் பின்சொல்லுவாம். அக்கால பித்தத்தை ஒழிக்கவேண்டியே காலையில் நெல்லிக்கனி முதலியவைகளை உட்கொள்ளல்வேண்டும் என வைத்தியம் கூறுகின்றது. நீரில் நனைத்த நீற்றின் நாற்றம் முற்றிலும் வமனத்தை (வாந்தியை)த் தடுக்கும் என்பது அனுபவம். இனி மாலைக் காலமியலே அய்யன் கபம் அதிகப்படும் காலமாகலாலும் அக்காலம் நீராட்டமின்மையாலும் மூளைச்சுத்தி சந்திச்சுழல் அக்காலத்துக்கு வேண்டினும் உடலெல்லாம் நிறைந்த பித்தம் முதலியவைகளை இயக்கவேண்டுவது அவ்வளவாக வேண்டுவதில்லை எனக் கருதியே 'மாலையில் நீரின்றி நீறுபூசலாம்' என்றது. இதனால் காலை நீராட்டத்தால் இறுகிய சந்துக் கபங்களை இளக்கவும் புத்தியை நல்வழி நடத்தவும் காலைப்பித்தத்தைக் கழிக்கவுமே திருநீற்றைத் தரித்தல் எனக் கண்டறிக.

இனி இத்திருநீறு வெகு சூக்ஷுமமாக உட்புகுந்து அங்குள்ள குளிர்ச்சியைச் சிறிது சிறிதாக ஒழித்திடும். சூட்டை உண்டாக்கும். சரீரத்துக்குச் சுகம் கிடைக்கச்செய்யும். ஆதலாற்றான் தருமநூல்களில் மண் முதலியவற்றிற் கமையாத ஆக்கினேயஸ்நானமாந்தன்மை இத்திருநீற்றிற் கமைந்தது. அதனுட்கருத்திது. ஸ்நானம் என்பது எவ்வழியாவது உள்ளும் புறம்பும் நிறைந்த மலத்தை ஒழிக்கும் தொழிலே. அதில் திருநீற்றால் முடிந்தால் அதை "ஆக்கினேய ஸ்நானம்" எனச் சொல்வது. இக்குண்மை இது. நீரானது மயிர்க்கால்வழி உட்சென்று அங்குள்ள மலங்களை ஒழித்து அவ்விடத்துக் குளிர்ச்சி உண்டாக்குகின்றது. இத்தொழில் நீரால் முடிய நல்லவேகமும் அல்லது நல்ல கனமும் அவரவர் படும் குறைந் தனீற்றிவலே மேற்படின் அது காற்றுலாதல் மற்றதாலாதல் காய்ந்திடும் ஆதலால் அவசியம் அதிக வீர்ய குணங்கொடுக்கும் என்றது, ஆதலாற்றான் குளம் ஆறு முதலியவற்றிற் குளிக்க வேண்டுமென்றோம். அன்னீர் அகப்படாவிடில் வெந்நீரே நலமென்றோம். இனி திருநீற்றின் பேராற்றலை எவ்வழியிலும் எவ்வித பூதசக்தியாலும் மாற்றமுடியாது. அதில் காற்று மோதினும் அதனாற்றல் குன்றாது. நீர்படினும் ஒழியாது நெருப்பிலிடினும் தொலையாது. ஆகையால் அதன் ஆற்றல் அழியாநிலைமை பெற்றதென வறிக. ஆயின் அத்திருநீறு புத்தி நிலைகளையும் சத்திகளையும் சுகப்படுத்துவதிற் றடையாதுமில்லை. ஆதலாற்றான் அதை 'ஆக்நேயஸ்நானம்" என்றனர் ஆன்றோர். ஒரிடம் தீயிடில் அத்தீ தனது பேராற்றலுள்ளவரையில் உள்ளும் புறம்பும் நிறைந்து ஆங்காங்குள்ள அழுக்கை யகற்றுமாதலின் அதுபோல் தமதாற்றலுள்ளவரை உள்ளும் புறம்பும் சுத்தி செய்யும் திருநீற்றை அக்கினி என வுபசரித்தது காண்க. ஆதலாற்றான் 'முக்காலத்தும் நீர் கலந்து நீற்றைப் பூசுக' என்றும் 'திருநீற்றால் செய்யும் ஸ்நானம் ஆக்னேயம்' என்றும், 'நீராடவியலாதவன் திருநீற்றிலாடுவான்' என்றும் மூதறிஞர் திருவாக்கிட்டனர்.

இனி இதற்குள்ள மற்றோர் பெருமையை விளக்குவாம். இத்திருநீறு 'இத்தேசத்தாரியர் சரீரம் எல்லாம் இறுதியில் நீறுவதேயென்று குறித்து அதுவழி மக்களுக்குப்பெருந்துறவை உபதேசிக்கின்றது' என்பதே. எங்ஙனமெனில் கூறுவாம். இத்தேசத்தில் உயிர்துறந்தவர் இருவகை ஸம்ஸ்கரிக்கப்படுவர். கொளுத்தல் அல்லது புதைத்தல் இதில் முதல் வகையால் நீறுவது எல்லோருமறிவார். இரண்டாமுறையில் பதர் திருநீறு உப்பு இவற்றில் இட்ட சரீரம் அதுவாக முடிகிறது. இனி மண்ணிற்றனே சரீரத்தைப் புதைத்தால் அது அழுகிப்புழுக்கள் உண்டாகப்பெறும். துர்நாற்றம் வீசும். இனி உப்பு சாம்பல் முதலியவை போட்டால் அவைகளின் சேர்க்கையால் அச்சரீரம் உளுத்து நீறாகும். உளுத்து நீறுவதை மரமுதலியவற்றிலும் காணலாம். சிலர் விபூதித் துவேஷத்தால் தங்கள் நெற்றிகளில் அதைத்தரியா தொழிந்தாலும் அவர் சரீரம் இறுதியில் அந்தத் திருநீறுருவமாய் முடியும் என்பதை மறுக்க வல்லாராகார். அவரும் ஒரு காரணமாய் உப்பிற்றனே அச்சரீரத்தை யிடுகிறார்கள். இனி தனியுப்பில்லாவிட்டால் காலம் குளிர்காலமாயின் அவ்வுப்புக் கரைந்து மண்ணில் கலக்கச் சரீரம் அழுகி நாற்றம் வீசும். அதனான்றே இக்காலத்து மேற்றிசை வைத்தியரும் புதைப்பதிலும் கொளுத்துவதே நலமெனவும் புதைக்க நேர்ந்தால் அச்சரீரத்தைச் சாம்பல் சுண்ணாம்புகளில் இடலாம் என்றும் சொல்லுகிறார்கள். ஆயின் திருநீற்றின் பெருமையை யாதுரைப்போம். இதில் பல வேற்றுமைகளும் இதற்குள்ள பலமுறைகளும் வேதாகமங்களுட் கண்டு களிக்க. (மற்றது பின்வரும்.)

☞ * க்ஷத்திரியன். *
தபால் சார்ஜ் உள்பட இரண்டரை அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

இந்து தேவஸ்தான தர்மபரிபாலன சட்டத்தைப்பற்றி, ஸ்ரீ ஈ. வெ. ராமசாமி நாயக்கர் ஸ்ரீமான்களான டாக்டர் நாயுடு அவர்களுக்கும், கலியாணசுந்தர முதலியார் அவர்களுக்கும் எழுதின கடிதம்.

அன்புள்ள டாக்டர். வரதராஜுலு நாயுடு காரு அவர்களும் ஸ்ரீமான் திரு. வி. கல்யாண சுந்திரமுதலியார் அவர்களும் ஈரோடு ஈ. வெ. ராமசாமி அநேக நமஸ்காரம் ஐயா,

இந்து தேவஸ்தான சட்டசம்மந்தமாய் சமீபத்தில் சிலரால் நடத்தப்படும் கண்டினக் கிளர்ச்சிகளை கவனித்துப் பார்த்து வந்தவர்கள் இது மதசம்பந்தமான கிளர்ச்சி யல்லவென்றும் சுயநலத்தை அடிப்படையாய்க் கொண்ட வகுப்பு சம்பந்தமான கட்சிவாதம் என்றும் இப்பொழுதாவது உணர்ந்திருப்பார்கள். வகுப்பு சம்பந்தமான சுயநலங்களை மனதில் வைத்து மதசம்பந்தமான கிளர்ச்சி என்று போலிப்பெயரால் இந்துக்களின் பெரும்பான்மையோரா யிருக்கிற பல சமூகத்தாருக்கு இழிவும், நஷ்டமும் உண்டாகும்படி இந்துக்களில் ஒரு மிகச்சிறு கூட்டத்தார் தங்களுடைய தந்திரத்தினாலேயும் கூடா ஒழுக்கமுள்ள மடாதிபதிகள், மகந்துக்கள், மதாசாரியர்கள் முதலானவர்களாலும் உதவப்பட்ட பணச் செருக்குகளாலேயும் செய்துவரும் சூழ்ச்சிப பிரசாரங்களினாலேயும் இந்துக்களின் மேல்கண்ட இழிவுக்கும், கஷ்டங்களுக்கும், நஷ்டங்களுக்கும் சம்பந்தப்பட்ட சமூகத்தாரில் தரித்திரத்தினாலும் பேராசையினாலும், சுயநலத்திலும் அழுந்திக்கிடக்கும் ஒரு சிலரை விலைக்கு வாங்கிக்கொண்டு அவர்கள் மூலமாகவும் தங்கள் விஷமப் பிரசாரத்தைச் செய்து நம்மவர்களை ஏமாரச்செய்து கொண்டுவருவதை நாம் பார்த்துக்கொண்டிருப்பது பெரிய தேசத்துரோகமும், மதத்துரோகமும், சமூகத்துரோகமும் ஆகும் என்பதை நான் சொல்லாமலே தங்கள்போன்ற பெரியோர்களுக்கு விளங்கும். உண்மையிலேயே இந்துதேவஸ்தான சட்டம் மத விரோதமானது என்று நினைத்து தப்பபிப்பிராயத்துடன் கிளர்ச்சி செய்பவர்களும் சிலர் இருந்திருக்கலாம். எப்படியிருந்தாலும் இந்துதேவஸ்தான சட்டத்திற்கு விரோதமாகச் செய்யும் கிளர்ச்சிகளை தேச, மத, சமூக நன்மையைக் கோரி நசுக்கப் பிரயத்தனப்பட வேண்டியது அவசியம் என்பது வெகுஜன அபிப்பிராயம். அப்படிச் செய்வதினால் பிராமண துவேஷம் என்று சொல்லப்பட்டுவிடுமோ, பிராமணர்களின் புன்சிரிப்பு மறைந்துவிடுமோ, வைதீக உலகத்தில் தமக்குச் செல்வாக்கு குறைந்துவிடுமோ என்கிற பயம் நம்மவர்களில் தக்கவர்களான அநேகருக்குகூட இருந்து மௌனஞ்சாதிக்கச் செய்து வருவது எனக்குத் தெரியும்.

ஆனால் அவர்கள் பிராமண உலகத்தைத் தப்பாய் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பது எனது துணிபு. எல்லாப் பிராமணர்களையும் நாம் ஒரேமாதிரியாய் நினைத்துக்கொண்டிருப்பதால் நமக்கு இவ்வித பயம் ஏற்படுகின்றது. பிராமண சமூகத்தில் நேர்மையானவர்களும் பொதுநோக்கு உடையவர்களும் இருக்கிறார்கள் என்பதையும், அவர்களுக்கு தேசத்தில் உண்மையான செல்வாக்கு இருக்கிறது என்பதையும் நாம் மறவாமல் இருந்தால் பயப்படவேண்டிய அவசியமே இல்லை. அப்படி மீறி நிஷ்டூரங்களும் செல்வாக்கு குறைவுகளும் ஏற்பட்டபோதிலும் அது வெகுநாளைக்கு நிலைத்திருக்காது எதுபோல் என்றால் புண்ணை கீறி ஆற்றுவதுபோலாகும். கீறும்போது கொஞ்சநேரம் அதிகநோவு உண்டாவது போலவும் பிறகு சுத்தமாய் ஆறிவிடுவது போலவேதான் முடியும். நிஷ்டூரத்திற்கும் புன்சிரிப்புக்கும் பயந்து தேசத்தையும், சமூகத்தையும், மதத்தையும் காட்டிக்கொடுப்பது மேலா அல்லது தைரியமாய் யாரிடத்திலும் துவேஷமில்லாமல் சத்தியத்தைச் சொல்லி தோஷங்களையெல்லாம் நிவர்த்தித்து சீக்கிரத்தில் எல்லோ

ரும் ஒன்ருய்க் கலந்து ஒத்துவாழச் செய்வது மேலா? ஆகையால் இதுவிஷயங்களுக்காக சென்னையில் பெரிய கூட்டங் கூட்டி இந்தக் களில் சகல வகுப்பாரையும் அழைத்து போலி பிரசாரங்களையும், சூழ்ச்சிகளையும் அடக்கவும் உண்மையைப் பாமர ஜனங்களுக்கு விளக்கவும் தகுந்தபடி தேசத்தில் பிரசாரம் செய்யவும், பிரசார செலவுக்கு பணம் சேகரிக்கவும் ஒரு நிர்வாகசபை ஏற்படுத்த உடனே வேண்டிய ஏற்பாடு செய்யவேணுமாய்க் கோருகிறேன். சென்னையிலென்று எழுதியிருப்பது ஞல் சென்னையில் என்றே நினைத்துக்கொள்ள வேண்டியதில்லை. ஈரோட்டிலோ, திருப்பூரிலோ, திரிச்சியிலோ, கோயமுத்தூரிலோ அல்லது தங்களுக்குச் சௌகரியமான எந்த இடத்திலானலும் சரி. விஷயம் அவசரம் என்பதை மிகவும் பணிவுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இதை பொது நன்மையை உத்தேசித்து பிரசித்தப் படுத்தியிருப்பதால் இதில் அபிமானம் கொண்டு கலந்துகொள்ள இஷ்டமுள்ள கனவான்கள் ஈரோட்டிற்கு என் விலாசத்திற்கு எழுதக் கோருகிறேன்.

தமிழரின் சிறப்பு.

(ஸ்ரீமான். பி. தி. ஸ்ரீனிவாஸய்யங்கார் பின்வருமாறு எழுதுகிருர்.)

வணிகம்.

2 வணிகத்துக்கு பழந்தமிழில் 'செட்டு' என்னும் பெயர் ஆகையால் 'செட்டி' என்பது தனித் தமிழ் மொழியேயன்றி வடமொழியினின்று மருவி வந்ததல்ல. செட்டிகள் பலவிதக் கடைகள் வைத்துப் பொருள்களை விற்கிருர்கள். அவை மணிக்கடை, சில்லரைக்கடை, அங்காடி, சந்தை முதலியன. வணிகம் தவிர வட்டிக்குக் கடன்கொடுப்பது முண்டு. நாட்டில் அகப்படும் பொருள்களை யெல்லாம் வாங்கி விற்ருர்களாகையால் அவைகளின் பெயரை இங்கே குறிக்கவேண்டியதில்லை. வணிகம் எவ்வளவு பரவியிருந்தது என்று அறிய, உப்பு வாணியனுக்கு 'உமணன்,' 'உமட்டியன்' என்றும், அப்பவாணியனுக்குக் 'கூவியன்' என்றும், 'பிட்டுவிற்போருக்குக் 'காழியர்' என்றும் பற்பல பெயர்கள் இருப்பதிலிருந்து காணலாம். சில பொருள்களை நிறுத்துவிற்ருர்கள் என்பதற்கு அத்தாட்சியாக தூக்குக்கோல், ஞெமன்கோல் (தூக்கு) என்ற மொழிகள் உள.

வெளிநாட்டு வாணிகம் எப்பொருள்களைக்கொண்டு நிகழ்ந்தது. என்று அறியப் புறமொழிகளில் தமிழ்ச் சொற்கள் எவைகளை வழங்குகிருர்கள் என்று ஆராய வேண்டும். இவ்வாறு ஆராய்ந்தால், புறநாடுகளுக்குப் பின்வரும் பொருள்களைத் தமிழர் விற்கிருர்கள் என்றறியலாம்.—முத்து, பவழம், வைரம், மிளகு, கருவாப்பட்டை ஏலம், அகில், தரிசி, இஞ்சி, திப்பிலி, மயில் முதலியன. வணிகத்துக்காகப் பொருள்களை நிலத்தின்மீதும், நீரின் மீதும் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்துக்குக் கொண்டுபோவதற்காக உதவின பொருள்கள் வண்டில் (வளைந்த இல்) ஊர்தி, தேர், கப்பல், ஓடம், தோணி, தெப்பம். திமில். பரிசில், கலம் இவைகளின் உறுப்புகளைச் சொல்லும் பெயர்கள் கணக்கற்றவையுள.

வேளாண்மை.

3. 'வேள்' என்ருல் மண். வேளாளர் என்ருல் மண்ணை ஆள்வோர், அதாவது நிலத்தை உழுவதால் அதற்கு உரியவர் என்றவாறு. 'வெள்ளாளன்' என்பது 'வேளாளன்' என்று மாறி வந்ததோ, அல்லது வெள்ளத்தை ஆள்பவன்; நீர்பாய்ச்சுவதில் தேர்ந்தவன் என்பதோ தெரியாது. எனினும் பூமியையுழுது, பயிர் செய்வதில் தமிழர் தேர்ச்சியடைந்தவர் என்பதைக் காண்பிக்க உழவு, சொத்து பரம்படி, நடு, நாற்று, தொழி, உரம், குப்பை, ழும் என்ற மொழிகள் பழந்தமிழிலிருப்பதே போதும். நிலத்தை (1) புலம் (2) கொல்லை (3) தோட்டம் (4) காடு என்று நான்கு வகையாகப் பிரித்திருந்தார்கள் ஒருவர் நிலத்திலிருந்து மற்ருெருவர்நிலத்தைப்பிரிக்க எல்லை, வேலி, முதலியன உண்டு. உழும் நிலத்தை வயல்களாகப் பிரித்து வரப்புப் போட்டிருந்தார்கள். வயல்களை ஏர் அல்லது கலப்பை (உழுபடை)யைக்கொண்டு உழுது பரம்படித்து, நாற்றுநட்டு, விளைந்தபின் அறுப்பு அறுத்து, களத்தில்போட்டு, நெல்லை வீட்டில் சேர்க் கட்டி, வைக்கோலைப் போர்போடும் வகையில் நடக்

கும் வேலைகளெல்லாவற்றிற்கும் தனித் தமிழ்ப் பெயர்களே. அன்றியும் பழங்கள் வாரும் சோலை வேறு; பூந்தோட்டத்துக்கு தண்டலை யென்று பெயர். மேட்டு நிலத்துக்கு தகர், தாய் என்றார். வேளாண்மைக்குரிய மொழிகள் இவ்வளவு மிகுந்திருந்ததால் பண்டையத் தமிழர்கள் வேளாண்மையைப்பற்றி எவரிடத்தினின்றும் எதையும் கற்கவேண்டாமல், முழுவதும் அறிந்தார்கள் என்பதற்கு ஐயமேயில்லை.

நீரைச் சேர்த்துவைத்துப் பாய்ச்சுவதைப்பற்றி ஏரி, குளம், கேணி, கணறு, ஆறு, கால்வாய், மதகு, அணை, மடு, ஊற்று, கயம், மடை, ஓடை, குட்டை, ஏற்றம், கவலை முதலிய மொழிகளினின்று இப்போது எவ்வாறு நீர்ப்பாய்ச்சுகிறார்களோ, அவ்வாறே பண்டைய காலத்திலும் பாய்ச்சினரென்றறியலாம்.

பயிர் செய்த விதை வகைகள், பழவகைகள், பூவகைகள், காய்வகைகள், மாவகைகள் முதலியவற்றைப் பற்றின பெயர்கள் அளவற்றன இருப்பதால் அதைப்பற்றி விவரிக்க இடமில்லை. 'இருவி' என்றால் தினையரிந்த தாள். பொருள் உண்டான ஒரு மொழியிலிருந்து எவ்வளவு நுண்ணிய வேற்றுமைகளைக் கண்டு, பொருள்களுக்குப் பெயர்வைத்தாரென்றும் தெரியவரும். வெற்றிலை கட்டுவோர்க்கு 'பாசவர்' என்றிருப்பதால் இந்த வகைச் சிறிய வேலைகள் பலவற்றைத் தொழில்களாய்ப் பின் தொடர்ந்து வந்தார்கள்.

கைத்தொழில்.

4. கைத்தொழில் செய்பவர் பெயர்களிலிருந்து அவரது தொழில்கள் எவையென்று தெரியவரும். அப்பெயர்களாவன:— கருமான், கொல்லன், தட்டான், தச்சன், கம்மியன், சேணியன், காருகன், செப்போன் இவையன்றி இன்னும்பல பெயர்கள் உள. கருமார்கள் இரும்பு, எஃகு, வெள்ளி, செம்பு, தங்கம் இந்த உலோகங்களைக் கொண்டு வேலை செய்தார்கள். இவைகளாலான அணிகள் முதலிய பொருள்களின் பெயர்கள் பலவுள; கருவிகளின் பெயர்களும் மிகுதியே. கருமாரைத் தவிர, குயவர் செக்கார் (எண்ணெய் ஆடுவோர், கரும்பை ஆலையில் ஆட்டுவோர்) வண்ணார், கல்வினைஞர் முதலியவேறுவித வேலைக்காரரும்பலவுண்டு. கூத்தாடுவதும் ஒரு தனிவேலை. அதைச் செய்பவர் கூத்தர் (கண்ணுளர்); அவர்களுக்கு சாயம் பூசுவோர் 'கண்ணுள் வினைஞர்'. வேளாண்மைக்கு வேண்டிய கருவிகளென்ன, வணிகத்துக்கு வேண்டிய கைத்தொழில்கள், இடையர் வேலை, வேடர் வேலை முதலியவைகளுக்குரிய கருவிகளைச் செய்யும் தொழில்கள், இந்த வகையான தொழில்கள் சொல்லி முடியாது. சிறைத்தல், துன்னல் (தைத்தல்) முதலிய சிறுதொழில்களுமிருந்தன.

வீடுகள்.

5. வீடுகள் பலவகையிருந்தனவென்று முன்னமே சொல்லியிருக்கிறோம். அரண்மனை, மாடமாளிகை, வீடு, குடிசை, குச்சு முதலியன. பெரிய வீடுகளில் பலவகை அறைகளிருந்தன:— அட்டில் (சமையலறை), கொட்டகை, பள்ளியறை, முதலியன. இவ்வறைகளுக்குச் சாளரங்களால் வெளிச்சமும் காற்றும் வருவதற்கு ஏற்பாடு செய்திருந்தது. வீடுகளைச்சுற்றி சுவர்களும் முன்பக்கத்தில் திண்ணையும், கதவு அமைந்தவுடன் நடை (இடைகழி). பின்பு கூடம், தாழ்வாரம் முற்றமும் இருந்தன. அவை மீது கம்பம் (கந்து) மரத்தாலானதும் அதன்மேல் மரக்கைகளிட்டு, அவை மேல் கூரை (இறை இறப்பு) போட்டிருந்தது. அறைகளில் கொள்ளாத பொருள்களைப் பரண் (இதணம்) போட்டு அதில் சேர்த்துவைத்திருந்தது.

வீடுகளில் வழங்கின பொருள்கள் எவை? உட்காரமணை, ஊஞ்சல் படுக்கக் கட்டில் தொட்டில், மெத்தை, பாய், போர்வை, நெல்லுக் கொட்டகுதிர், மற்ற பொருள்களை வைத்துக்கொள்ள மஞ்சிகை (பெட்டி) சிமிழ், பானை (குழிசை) நீருக்குக்குடம், தவலை, செம்பு குவளை, கிணற்றிலிருந்து நீர் இழுக்கக் கயிறு, தாம்பு, உறி, சமையல் செய்யச் சட்டி, கரண்டி அகப்பை, உரல் உலக்கை, திருகை, அம்மி, குழவி, மடக்கு, தட்டு, அடுப்பு, மூட்டை, கூடை, முறம், குடலை. வெளிச்சத்துக்காக விளக்கு தீவட்டி (தீவர்த்தி எரி), பந்தம், குளிர்காலத்தில் வேண்டிய கணப்பு, கும்பட்டி, சாமம் தெரிய மணி, தாச, நெருப்புண்டாக்க கெவி (தீக்கடைக்கோல்) முதலியன.

உடை.

6. ஆடைகளில் பலவகை கிடையாது. ஆணும் பெண்ணும் நீளமான துகிலை உடுத்தார்கள். ஆனால் ஆண்கள் நெய்த ஆடையைத் துண்டு போட்டுக் கட்டிக் கொண்டதால் அதற்குத் துணி, அறுவை என்ற பெயர் வந்தது. துண்டு போடாதது சேலை, புடவை. சில பொழுது சட்டையும், பாகையும் போட்டுக் கொண்டார்கள். மேலாடைக்கு ஒலியல் [தானை] என்று பெயர்; உள்ளாடைக்குக் கோவணம், கச்சை, தட்டம் என்று பெயர். இவை தவிரத் தலைக்குக் குடையும், காலுக்குச் செருப்பும் உண்டு.

ஆடைகள் பருத்தியாலும், பட்டாலும், ஆட்டு மயிராலும் நெய்தவை. அவைகளைத் தோய்த்து, உலர்த்தி,

எவருந் தீண்டாமல் மடித்து வைத்தவை மடி. உடுத்தி விழுந்தவை விழுப்பு.

அணிகள்.

7. பெண்கள் கூந்தலைச் சீவி பலவகையாய்ப் பின்னிக்கொண்டார்கள். அதில் ஒருவகை 'சுறவுவாயை'ப் போலிருக்கும். சிலர் கொண்டையாய்ச் செருகிக் கொள்வதுண்டு. கூந்தலையும், கழுத்தையும் அழகு செய்ய பூவாலான கண்ணி [இணர்] யைப் போட்டுக் கொள்வதுண்டு. இதுவன்றி மஞ்சள், பொற்சுண்ணம் முதலியவற்றால் அழகு செய்து கொண்டார்கள். தங்கம், வெள்ளி, மணிகள் இவைகளாலான அணிகள் பின்வருமாறு:—தாலி, வளை, ஓலை, காப்பு, தொடி, குழை. காறை, தோடு, சிலம்பு, சதங்கை, நாண் [தாழ்], கிண்கிணி, சங்கிலி, பாடகம், வீரர்களும் தொடிகளை அணிந்தார். உடல்மேல் நல்ல மணம்பொருந்திய தேய்வைகள் பல வழங்கினார்கள்.

பொழுது போக்குகள்.

8. தமிழர் மிகக் களிப்புடன் நேரத்தைப் போக்கினார்கள் என்பதற்குப் பல அத்தாட்சிகள் உள. கூத்துக்களம் ஏற்படுத்திப் பலவகைக் கூத்துகள் ஆடினார்கள். கூத்துடன் பாட்டு கலந்திருந்தது. வாய்ப்பாட்டன்றி வாத்தியங்களும் [இயம்] உண்டு. இவைகளைக் கொண்டு பாடுவோர் இயவர். வாத்தியங்களில் உயர்ந்தது யாழ். யாழ் பல உறுப்புகள் அடங்கியது. ஒவ்வொரு உறுப்புக்கும் தனிப்பெயரிட்டிருந்தார்கள். சிறுவர் சிறுமியர் கும்மி, அம்மானை, ஊசல், தெள்ளேணம், சாபுல், ஓரை, கவடி [பலகறை, அலகு சோழி] இவைகளை ஆடிக்கொண்டு, பாடிக்கொண்டு களிப்புடன் வாழ்ந்தார்கள். அடிப்பதற்குப் பறை, ஆகுளி, உடுக்கு முதலியன உண்டு.

பெரியோர்கள் வேட்டை, பந்தயம், சூதாட்டம், பந்தாட்டம் முதலியவற்றால் பொழுதைப் போக்கினார்கள்.

உணவு.

9. அரிசியைச் சோறு [அவிழ்] அக்கி, கறி, குழம்பு, சாறு, பால், தயிர், மோர்; நெய் இவைகளுடன் தின்றார்கள். ஏழைகள் கூழ் [துழவை] களி, கஞ்சி, இவைகளை குடித்தார்கள். கறி இருவிதம்: மரக்கறி, ஆட்டுக்கறி, சிற்றுண்டிகள் பலவகை இருந்தன. தோசை, அடை, பிட்டு, அப்பம் முதலியன. தித்திப்பான பொருள்களை வெல்லம், வெல்லப்பாகு தேன் இவைகளைக்கொண்டு செய்தார்கள். அரிசியல்லாமல், கம்பு, வரகு, கேழ்வரகு, தினை முதலிய விதைகளைப் பயிர்செய்து உணவுக்கு வழங்கினார்கள் இவையன்றி பயறு, துவரை, உளுந்து முதலியன உண்டு. இறைச்சி [புலால்] யும் பலவகை மீனையும் கறிசெய்து தின்றார்கள், இப்பொழுதுபோலே கறிகளுக்குத் தாளிப்பு [குய்] செய்தார்கள் கறிகளுக்கு வழங்கின காய், கிழங்குகள் பலவகைத்தன. கறிகள், பொரிகறி ஊறு கறி [காடி] இன்னும் சிலவகையுண்டு. குத்தலரிசி, கொழியலரிசி என்று இருவகை அரிசியைச் சமையல் செய்தார்கள். எள்ளுருண்டைக்கு நோலை யென்ற பெயரிருந்ததால் இன்னும் பலவிதச் சிற்றுண்டிகள் செய்தார்களென்று நினைக்க இடமிருக்கிறது.

படிப்பு.

10. தமிழர் சில கலைகளைக் கற்றிருக்க வேண்டும்; இல்லாவிடில் படி, கல், ஓது என்ன மொழிகள் அவர்களுள். உண்டாயிராது. செய்யுள்கள் பாடவும் அவைகளைப் பள்ளிகளில் கற்கவும் வழக்கம் உண்டாயிருக்க வேண்டும். எண்ணுமெழுத்து மிருந்தன. அவைகளைச் சுவடியில் வரைந்தார்கள். படிப்புச் சொல்லிக் கொடுப்போன் கணக்காயன் ஓவம் (ஓவியம்) பதுமை முதலிய மொழிகளிலிருந்து அழகிய உருவங்களை அமைத்தாரென்று அறியலாம். கற்றோர் அப்போதைக்கப்போது கூடி, கொடிகட்டி, உதழ்வதுண்டு என்றால் பேச்சுப்பந்தயம்போட்டு அதில் எவர் வல்லவர் என்று பார்ப்பதுண்டு. தமிழர் இயற்கைப்பொருளை உற்றுப்பார்த்து அவைகளது பண்புகளை அறிவதில் மிக அவாக்கொண்டவர்; ஏனெனில் மரம், செடி, பூ இவைகளை பலவகையாய் பிரித்து யிட்ட பெயர்களுக்கு அளவு கிடையாது.

அன்றியும் மாந்தர்வாழும் நிலத்தை குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்று ஐந்திணைகளாக வகுத்து, ஒவ்வொன்றின் பண்பையறிந்து நிலத்துக்குத்தக்க பிழைப்புகளை ஏற்படுத்தியதல்லாமல், செய்யுள்களில் திணைக்குத்தக்க பொருள்கள் முதலியவற்றைப்பற்றி ஏற்பாடு செய்தார்கள். உடலின் கூறு, நோய்கள் அவைகளுக்கு மருந்துகள் வான் பொருள்களின் பெயர்கள் இவைகளையும் பல கற்றறிந்தார்கள் பொருள்களை மாத்திரமல்ல மக்களது உள்ளத்தை ஆராய்ந்து பார்த்து அதைப்பற்றியும் அதனது பண்புகளைப்பற்றியும் எத்தனையோ பெயர்களை யுண்டாக்கினார்கள். அவைகளில் சிலவற்றைக் குறிப்பாம்:— அகம் உள்ளம் நினைப்பு இயல்பு உணர்ச்சி இன்பம் துன்பம் சினம் பகை அருள் அன்பு மெய் பொய் உறுதி ஊக்கம் தன்மை சினை வினை கொள்கை தூய்மை ஒழுக்கம் வழக்கம். சிலர் தமிழில் பண்புப்பெயர்கள் (Abstract nouns) இன்மையால் சில ஐரோப்பிய கலைகளைப்பற்றித் தமிழில் நூற்களியற்ற முடியாதென்பர். இக்கூற்று தெரியாத்தனத்தா லன்றி வேறில்லை. எப்பொருளைப்பற்றியும் தமிழில் எழுத முடியும். ஏனெனில் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தமிழர் கல்வி கேள்வியில் சிறந்திருந்தார்களென்பதற்கு ஐயமில்லை.